விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 332 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை (16.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உலகளாவிய பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்

| ஜெர்மனி | | பிரான்ஸ் | |
|---|---|---|---|
| <5KG | 2350/= | <5KG | 2650/= |
| <11KG | 1950/= | <11KG | 2100/= |
| <16KG | 1930/= | <16KG | 1950/= |
| <21KG | 1900/= | <21KG | 1900/= |

01kg க்கான கட்டணம்
011 4 654 444
(5481)
GTV Express
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## தமிழ் மக்கள் நிரந்தரத் தீர்வைப் பெற மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### தொல்.திருமாவளவனிடம் முன்னணி வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வினைப் பெற இந்திய மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம்கொடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்

22ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் காற்றாலைக்கு எதிரான போராட்டம் நிறைவு



23ஆம் பக்கம் பார்க்க

## மருந்துச்சிட்டையை தெளிவாக எழுதுக

### இலங்கை மருத்துவ சபை

(கொழும்பு)

மருந்துச்சிட்டை தெளிவாக எழுதுக. இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றாத மருத்துவர்களுக்கு எதிராக நட

23ஆம் பக்கம் பார்க்க

## போதைப்பொருளுடன் யாழ்.நகரில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் 25 கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 20 போதை மாத்திரைகள் என்பவற்றுடன் மூன்று சந்தேக நபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்

23ஆம் பக்கம் பார்க்க

### - பல மில்லியன்கள் செலவழித்து -

# மத்தல விமான நிலையமாக பலாலியை மாற்ற முடியாது

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(கொழும்பு)

பல மில்லியன் ரூபாய் பணத்தை செலவழித்து பலாலி விமான நிலையத்தை மத்தல விமான நிலையம் போல் மாற்ற முடியாது என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு மாகாண சிரேஷ்ட

## பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஜி.எம்.எச் புத்திக்க நியமனம்

(யாழ்ப்பாணம்)



வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஜி.எம்.எச். புத்திக்க சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்

23ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில்

## 40 ஆசிரிய மாணவர்கள் திடீர் சுகவீனத்தால் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் 40 வரையிலான ஆசிரிய மாணவர்கள் திடீர் சுகவீனத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் மாணவர்களுக்கு திடீர் காய்ச்சல் மற்றும் வாந்தி

22ஆம் பக்கம் பார்க்க

### தருமபுரம் கல்லாறில்

## ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WE ARE HIRING

## SENIOR LECTURER – HIGHER GRADE (BUSINESS)/ SENIOR LECTURER - REGULAR (BUSINESS)

## DEPARTMENT OF BUSINESS

**WORK BASE : SLIIT NORTHERN UNI – JAFFNA**

**INSTITUTIONAL PROFILE :**

Northern Uni, affiliated with the Sri Lanka Institute of Information Technology (SLIIT), is a premier higher education institution dedicated to academic excellence, innovation, and global relevance. We offer internationally recognized undergraduate and postgraduate programs aimed at nurturing future-ready graduates and advancing higher education in the Northern region of Sri Lanka.

**KEY RESPONSIBILITIES: SENIOR LECTURER (HIGHER GRADE / REGULAR) - BUSINESS**

- Deliver high-quality teaching across Foundation, Undergraduate, and master's level programs in areas such as Research, Marketing, Accounting, Finance, and Management
- Design and update curricula aligned with international academic and industry standards.
- Supervise undergraduate and postgraduate research projects and scholarly work.
- Conduct and publish research in reputed peer-reviewed journals.
- Contribute to curriculum design, academic quality assurance, and accreditation processes.
- Mentor junior faculty and promote academic and professional development within the department.
- Participate in academic administration, assessments, and other institutional activities as assigned.

**CANDIDATE PROFILE: SENIOR LECTURER (HIGHER GRADE) - BUSINESS**

The ideal candidate should demonstrate academic leadership, a strong research orientation, and a commitment to teaching excellence. Applicants must possess:

- A PhD (earned doctoral degree) in **Management, Marketing, Accounting, Finance, Human Resources, Business Analytics, Business Administration**, or a closely related field from a recognized university.
- A Master's degree and a Bachelor's degree (with First or Second Class Honours) in the relevant specialization, or a Bachelor's degree (Pass) with a Master's degree or equivalent professional qualification in the relevant field.
- A minimum of six (6) years of proven experience in teaching, research, and/or professional practice after completing the bachelor's degree.
- A strong record of research publications in recognized academic journals or significant contributions to professional practice.
- Experience in curriculum development, academic quality assurance, and program delivery at the tertiary level.
- Demonstrated ability in supervising undergraduate and postgraduate research projects.
- Prior experience in internationally affiliated academic programs will be considered an additional advantage.
- Preferably below 45 years of age.

**CANDIDATE PROFILE: SENIOR LECTURER (REGULAR) - BUSINESS**

The ideal candidate should demonstrate academic leadership, a strong research orientation, and a commitment to teaching excellence. Applicants must possess:

- A two-year research-based master's degree or a master's degree with at least 60* credits or the equivalent of which not less than 15* credits or equivalent of research by way of thesis/dissertation in Management, Marketing, Accounting, Finance, Human Resources, Business Analytics, Business Administration, or a closely related field from a recognized university.
- A bachelor's degree (with First or Second Class Honours) in the relevant specialization such as Management, Marketing, Accounting, Finance, Human Resources, Business Analytics, Business Administration, or a closely related field from a recognized university.
- A minimum of six (6) years of proven experience in teaching, research, and/or professional practice after completing the bachelor's degree.
- A strong record of research publications in recognized academic journals or significant contributions to professional practice.
- Demonstrated ability in supervising undergraduate research projects.
- Prior experience in internationally affiliated academic programs will be considered an additional advantage.
- Preferably below 40 years of age.

**APPLICATION PROCEDURE:**

Interested candidates who meet the above criteria are invited to submit their comprehensive **academic resume**, a **cover letter**, the **duly completed Application Form**, and **Referee Report Form**, which can be downloaded from the Northern Uni website (northernuni.lk). The cover letter should clearly highlight the candidate's suitability for the position.

Applications can be submitted via email or post as follows:
**By Email: career@northernuni.com**

**By Post:** Manager – Human Resources & Administration
Northern Uni (Pvt) Ltd, No. 239, Arasady Road, Kantharmadam, Jaffna.

Please indicate **"Application for Senior Lecturer (Higher Grade/Regular) - Business"** in the subject line of the email or on the top left corner of the envelope.

**Application Deadline: 15th December 2025**

(5919)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

APPLY **NOW**

---

**கனடா - வரி இல்லாமல்**
**விரைவு பொதிகள் சேவை**

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4336)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2160/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 076 822 6237

---

**அலுவலக உதவியாளர் தேவை**

யாழ்ப்பாணம், இருபாலை, டச்சு வீதியில் அமைந்துள்ள ஒரு நிறுவன அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் தேவை. தயவுசெய்து 076 197 7151 என்ற எண்ணை அழைக்கவும்.

(C-330)

---

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியிலுள்ள Phone shop ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை. சுயவிபரக் கோவையினை இணையத்தளத்திற்கு அனுப்பவும்.

puvan1979@gmail.com

(5936)

---

**விபஸ்ஸனா தியான முகாம்**



தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில்

**10 நாள் தியான முகாம்**

சயாகி யூ பா கின் அவர்களின் பாரம்பரியத்தில், எஸ். என். கோயங்கா அவர்களால் கற்பிக்கப்பட்டது.

**டிசம்பர் 4 முதல் டிசம்பர் 15, 2025 வரை.**

வயது எல்லை : 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் உணவு மற்றும் தங்குமிடம் உட்பட அனைத்து தியான நிகழ்ச்சிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**பாத்திமா தியான இல்லம், பண்டத்தரிப்பு.**

விண்ணப்பிக்க அல்லது மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்.
0716439454, 0773504491 or Whatsapp 0774935850
மின் அஞ்சல்: info@sobha.dhamma.org
ஆன்லைனில் பதிவு செய்ய, செல்க: https://sobha.dhamma.org
மகிழ்வோடிருங்கள்...

(C-332)

---

**நாகபூஷணி திருமண சேவை**

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.

மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(5935)

---

**அழகு நிலைய உதவியாளர் தேவை**

அழகு நிலைய உதவியாளர் (Beautician Assistant) தேவை. (பெண்)

தொடர்புகளுக்கு:
**077 885 4905**

(5931)

---

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

நல்லூரில் வைத்தியர் ஒருவரின் வீடொன்றிற்கு பகல் நேர தினசரி சமையல் மற்றும் வீட்டைச் சுத்தம் செய்வதற்கு பணிப்பெண் தேவை. தங்க வேண்டிய அவசியம் இல்லை.

தொடர்புகளுக்கு :
**077 030 4848**

(5934)

---

# மீட்பு

நெடுந்தீவு 9 ஆம் வட்டாரப் பகுதியிலுள்ள பாவனையற்ற காணியிலிருந்து துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு குறித்த துப்பாக்கியானது மீட்கப்பட்டு விசாரணைகளின் பின் நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்முடன் விளையாட வேண்டாம்
## எதிர்க்கட்சிகளை எச்சரிக்கும் ரில்வின்

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக எதிரணிகளால் 5 ஆயிரம் பேரை திரட்ட முடியுமெனில் அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக 50 ஆயிரம் பேருடன் களமிறங்கக் கூடிய வலுவான அரசியல் கட்டமைப்பு எம் வசம் உள்ளது என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

36 ஆவது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் விஹார மஹாதேவி திறந்த வெளியரங்கில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டு எதிரணி எனக் கூறிக் கொள்ளும் தரப்பினரால் எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆட்சியைக் கவிழ்ப்பது பற்றியும் கொழும்பை சுற்றிவளைப்பது குறித்தும் தற்போது கதைக்கின்றனர்.

அவர்களின் நகர்வுகள் எமக்கு சவால் அல்ல. எப்படி போராட்டம் நடத்த வேண்டும் எப்படி பேரணி நடத்த வேண்டும் என செய்து காட்டியவர்கள் நாம்.

எனவே எம்முடன் விளையாட வர வேண்டாம் எனத் தெரிவித்தார். (நி)

# மாகாணசபைத் தேர்தலிலும் எதிர்க்கட்சிகள் தோற்கடிக்கப்படும்!
## உறுதிபடத் தெரிவித்தார் அமைச்சர் பிமல்



**(கொழும்பு) ........................ நாட்டில் மாகாணசபைத் தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும் என சபைத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் வைத்து நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் குறித்து பேச்சு நடந்து வருகிறது. இதன்படி, தேர்தலை நடத்துவோம். அதில், எதிர்க்கட்சி முழுமையாக தோற்கடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

**01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரை**

யாழ் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துநர்களிடமிருந்து 01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலை பகுதியில் உள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 16.11.2025 ,தொடக்கம் 01.12.2025 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 21.11.2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கணக்காளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 100.000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக் கேள்விகள் 01.12.2025 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இவ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10கி.மீ க்குள் உட்பட்டிருப்பதுடன், உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொடர்பாக அப்பகுதிக்குரிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினது உணவு கையாளும் தரச்சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். அதனை எமது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினரால் பரிசீலனை செய்யப்படும்.
8. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க் காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021-222 2261 (Exchange No 226) தொடர்பை ஏற்படுத்திக் பெற்றுக்கொள்ளலாம்.
9. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப் பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/பிராந்திய பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம்.**

(C-4334)

# சுமந்திரன் மற்றும் சாணக்கியனை சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கை தமிழரசுகட்சி பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோரை கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்ட தகவலின்படி, இலங்கை-இந்திய உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் நாட்டின் சமீபத்திய அரசியல் முன்னேற்றங்கள் குறித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மணிவிழா நாயகனை மனதார
## வாழ்த்துகின்றோம்




# இரத்தினம் வதனவாசன்

கலாபூஷணம் இரத்தினம் செல்வமணி தம்பதியினரின் கனிஷ்ர புதல்வனும் சாரங்கா இசைக்குழுவின் இசை இயக்குநரும் பிரபல கிற்றார் வாத்திய கலைஞரும் இசைத் துறையில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்றவரும் யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை மேற்பார்வையாளருமாகிய இரத்தினம் வதனவாசன் அவர்களை மணிவிழா நாளில் அன்னை கலைவாணியின் அருளாசியுடன் மனதார வாழ்த்துகின்றோம்.

(5921)

வாழ்த்துவோர்–
**கவிஞர்– அரியாலையூர் வே. ஜயாத்துரை குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் அண்மையில் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் "மாந்துளிர்" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. (படம்:-சுபேசன்)



கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம் ஞாபகார்த்த வார நிகழ்வும், கூட்டுறவாளர்கள் கௌரவிப்பும், பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. (படம்:-தேவானந்தன்)



மர்ஹூம் அப்துல் கபூர் ஞாபகார்த்தமாக யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்ற ஒன்று கூடலின் போது ஒஸ்மானியா கல்லூரியில் ஐந்தாம் ஆண்டு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றது.



சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய "கொலஸ்திரோல் நோய்" என்னும் பொதுமக்களிற்கான ஒரு வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை சூரிய மஹால் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வைத்தியர்கள், தாதியர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படம்:-மகாலிங்கம்)



தென்மராட்சி இலக்கிய அணி நடத்திய பாரதி விழா நிகழ்வும் அண்மையில் அமரத்துவமடைந்த கவிஞர் த.நாகேஸ்வரனின் அஞ்சலி நிகழ்வும் தென்மராட்சி கலை கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுடைய தலைமையில், "பாரதியிடம் இருந்து இன்றைய அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ள வேண்டியது இனப்பற்றையே அல்லது தேசப்பற்றையே" என்னும் தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்வும் இடம்பெற்றிருந்தன. (படம்:-சுபேசன்)



சாவகச்சேரி நகராட்சி மன்றின் முன்னாள் தலைவர் அமரர் இ.தேவசகாயம்பிள்ளையின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)



யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் நாதமணி மதுசூதனன் வேல் நாதம்" நாதஸ்வரக் கச்சேரி இடம் பெற்றது. (படம்:-மகாலிங்கம்)



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடாத்துகின்ற 'கார்த்திகை வாசம்' மலர்க்கண்காட்சி நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இவ்விழாவில் இந்திய பாராளுமன்ற உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல். திருமாவளவன் விருந்தினராக கலந்து கொண்டார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய - சமூகப் பிரிவின் ஏற்பாட்டில் பருத் தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதி யில் உள்ள அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் போதை ஒழிப்பு ஸ்டிக்கர் ஒட்டும் செயற்றிட்டம் நேற்றைய தினம் முன்னெடுக்கப் பட்டது. (படம்:-மகாலிங்கம்)





கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் சிவில் பாதுகாப்பு குழுக்களை வலுப்படுத்தி சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் சிரேஷ்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சமன் அங்கம்மன தலைமையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது. (படம்:-தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA
# REGISTRATION OF SUPPLIERS & CONTRACTORS - 2026

Applications are invited up to 31st December 2025 from reputed Suppliers /Manufacturers / Contractors who wish to register themselves for the under mentioned supplies and services.

**1. CONSUMABLE ITEMS**
- 1.1 Stationery Items (Statinery, Calculator, Toner, Cartridge, Printer Ribbon, Printer paper, etc...)
- 1.2 Kitchen utensils including cutlery & crockery.
- 1.3 Sanitary Items - Brooms, Eekkal Brooms, Doormats, Baskets, Toilet Cleaner Liquids, Hand Dishwashing liquids, cleaning & polishing materials, etc.
- 1.4 Raincoats, Gumboots, Umbrellas, Shoes etc.

**2. BOOKS, PRINTING & BINDING**
- 2.1 Printing, Block Making, Rubber & Date Stamps.
- 2.2 Book, Magazines & other publications.
- 2.3 Binding of Books & Periodicals.
- 2.4 T-Shirt and Jersey Printing Work

**3. FIXTURES & FITTINGS**
- 3.1 Office Furniture (Wooden/Steel), Computer Chairs & Table
- 3.2 Office Equipment (Duplicating Machine, Photo Copiers, Fax etc.)
- 3.3 Fire extinguishing equipment & safety equipment (construction).

**4. BUILDING MATERIALS, MAINTENANCE ITEMS & TOOLS**
- 4.1 All types of Hardware
  - a) All kinds of paint, brushes, mixers, and other related materials.
  - b) Types of cement, types of tile mortar, and types of water proofing cement.
  - c) River sand, Fine sand, gravel, Metals and stones, etc. for construction work.
  - d) Steel bars, galvanized pipes, and nails.
  - e) Building fixtures, fasteners, and locks (made of iron and brass).
  - f) UPVC/CPVC pipes and fittings.
  - g) Types of Timber, Planks and reapers
  - h) Aluminum extrusion and fittings, Glass, plywood.
  - i) bathroom fittings and tiles for walls and floors.
  - j) Supply of sewage treatment plants and maintenance items.
  - k) Supply of water treatment plant and maintenance items.
  - l) Water proofing chemicals and construction chemicals.
- 4.2 RO Plant Materials
- 4.3 Air Conditioner Parts

**5. ELECTRICAL ITEMS**
- 5.1 Electrical items, equipment & spares (Wire, Bulbs & etc.)

**6. LABORATORY ITEMS**
- 6.1 Laboratory Equipment.
- 6.2 Laboratory Chemical & Glassware.

**7. VEHICLE MAINTENANCE**
- 7.1 Tyres, Tubes & Batteries.
- 7.2 Motor Spares & accessories.
- 7.3 Repairs to Motor Vehicle.
- 7.4 Vehicle Interior works

**8. GENERAL SUPPLIES & SERVICES**
- 8.1 Ayurveda Drugs/Medicines/Drugs & Medical supplies.
- 8.2 Sports goods.
- 8.3 Textiles, Window Curtains, Uniform Materials etc.
- 8.4 Insecticide, Tools for Gardening, Natural fertilizer, Flower trees and crops.
- 8.5 Repairs to office machines & equipment (Computers, IT Equipment, Fax Machines, Typewriters, Photocopiers, Calculators & Ronio Machine, etc.)
- 8.6 Repairs, Polishing and reconditioning to steel / Wooden Furniture.
- 8.7 Rettaning of Chairs.
- 8.8 Tailoring of Garments & door & window curtains
- 8.9 Laundering.
- 8.10 Janitorial Services.
- 8.11 Security Service.
- 8.12 Courier Service
- 8.13 Customs Clearing Service
- 8.14 Events Management Service.
- 8.15 Catering Services (Lunch / Refreshments)
- 8.16 Supply of Video and Photography Services and Equipment.
- 8.17 Supply of Sound & Light Equipment on rent basis.
- 8.18 Travaling Agent Service.
- 8.19 Hiring of Vehicle (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.)
- 8.20 Hiring of Machineries (JCB, excavator, compressor, pay loader, etc.)
- 8.21 Waste Disposal and Recycling Services

**9. ENGINEERING SERVICES**
- 9.1 Drawing of Name boards & making plastic name boards.
- 9.2 Repairs to electric motors, Water Pumps, Fans, Including re-winding.
- 9.3 Repairs to Generators.
- 9.4 Repairs & Servicing to Air Conditioners.
- 9.5 Construction and repairs to Building/Roads/ Other Structure
- 9.6 Electrical wiring.
- 9.7 Repairs and maintenance of potable water supply, sewerage, drainage and sanitary plumbing.
- 9.8 Fabrication and Installation of Iron / Aluminum fixtures related to buildings.
- 9.9 Consultancy service for buildings / building services / related machinery & Equipment.
- 9.10 Consultancy service for Electrical services.
- 9.11 Supplying and fixing fixed timber furniture / Carpentry works.
- 9.12 Drafting/ Blue printing drawing, Auto Cad Drawings.
- 9.13 Termite proofing / pest control services.
- 9.14 Labour supply (Skilled, unskilled and Security).
- 9.15 Preparation of Bill of Quantity (BOQ) for Maintenance Work.
- 9.16 Repairs and maintenance of fire detection, protection, and suppression systems.

**10. Electronic Items**
- 10.1 Electronic components including Computers, Computer Parts.
- 10.2 I.T Hardware & Software Supply, Service & Maintenance.
- 10.3 Communication Systems & Equipment Supply, Service & Maintenance.
- 10.4 Telephone Equipment.
- 10.5 Supply & Installation of Network Cabling & Equipment

**11. Software**
- 11.1 Firewall Software Purchase - Network security solutions
- 11.2 Developing Software Applications - Custom or in-house applications
- 11.3 Antivirus / Endpoint Protection Software - Protection against malware and viruses
- 11.4 Database Management Software - SQL, Oracle, or other database solutions
- 11.5 Operating System Software - Windows, Linux, or other OS licenses
- 11.6 Office Productivity Software - Word processors, spreadsheets, presentation tools
- 11.7 Backup and Recovery Software - Data backup, recovery, and disaster management tools
- 11.8 Cloud Services / Cloud-based Software - SaaS subscriptions, cloud storage solutions
- 11.9 Licensing and Subscription Management Software - License tracking, renewal management
- 11.10 Software Maintenance and Support Services - Updates, patches, and technical support

**CONDITIONS RELATED TO REGISTRATION**

1. The application should be prepared by the supplier on own as per the specimen given in the application. All applications should be submitted under registered post, cover marked as **"Registration of Supplies/services - 2026"** on the left hand corner of the envelop.
   - ❖ The deposit slip and application for registration should be addressed to the **Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna.** Individual applicants are required to attach a copy of their Business Registration (BR). Registered companies should attach only their Business Registration (BR), Articles of Association (AOA), and Memorandum of Association (MOA). If available, applicants may also include their VAT registration, CIDA registration and NMRA License. Please avoid submitting any documents that are not listed above.
2. A separate application must be submitted for each main category of supply or service. Each application should include a copy of the deposit slip for a **non-refundable fee of Rs. 2,000/-**, deposited to the Collection Account **(Reference No. 850000390000926) at the People's Bank, University of Jaffna.** If an applicant selects one or more sub-categories under the same main category, only a single fee of Rs. 2,000/- is required for that main category. If an applicant applies for multiple main categories, a separate fee of Rs. 2,000/- must be paid for each main category.
3. Organizations other than companies could register only for Supplies / Services according **to their general nature which specified in their Business Registration (BR), Article of Association (AOA) and Memorandum of Association (MOA).** Otherwise the application will be rejected without any notification.
4. Quotations for the year 2026 will be called from the registered suppliers. However, the University reserves the right to call for quotations from other sources or unregistered suppliers too.
5. Any supplier who fails to submit quotation when called for or fail to supply items /services in time or in uniformity with the stipulated specification may get his/her name struck off from the register without prior notice.
6. Those who register for the following item could include name, experience and qualifications of all Engineers and Architects permanently employed at your organization and provide CIDA Registration and specify the grade obtained (For the Item No 9.5,9.5,9.6,9.7,9.8,9.9,9.10,and 9.16)
7. Those who register for the following items (6.1 Laboratory Equipment and 6.2 Laboratory Chemicals & Glassware) shall submit a valid National Medicines Regulatory Authority (NMRA) License issued in the name of the organization.
8. Payment will be made to the Registered Name as appeared in the application. Therefore, suppliers should have the bank account for their business name.

Further details may be obtained from the Asst. Bursar (Supplies-II) T.P No. 021-2226519. University of Jaffna.

**Registrar,**
**University of Jaffna.**

(C-4381)

(6 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 வருட கால்பந்து வரலாற்றில் முதல்முறையாக ரொனால்டோவிற்கு ரெட்கார்ட்

போர்த்துக்கல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் 22 வருட கால்பந்து வாழ்க்கையில் முதன் முதலாக அவருக்கு ரெட்கார்ட் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால், 2026 பிபா கால்பந்து உலக கிண்ணத்தில் ரொனால்டோவிற்கு தடை விதிக்க வாய்ப்புள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

2026 பிபா கால்பந்து உலக கோப்பைக்கான தகுதி சுற்று போட்டியில், போர்த்துக்கல் மற்றும் அயர்லாந்து அணிகள் மோதிய போட்டி டப்லினில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், 2-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த போட்டியின் போது, அயர்லாந்து வீரர் டாரா ஓஷியாவை முழங்கையால் தள்ளி பவுல் செய்ததற்கு ரெட் கார்ட் கொடுக்கப்பட்டது.

தனது 22 வருட கால்பந்து வாழ்க்கையில், ரொனால்டோவிற்கு முதல்முறையாக ரெட் கார்ட் வழங்கப்பட்டுள்ளது.

இது வன்முறை என்ற பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், ரொனால்டோவிற்கு 3 போட்டிகள் தடை விதிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.




இதன் காரணமாக அர்மேனியாவிற்கு எதிரான போட்டியிலும், உலகக் கிண்ணத்திலும் முதல் 2 போட்டிகளிலும் ரொனால்டோ தடை செய்யப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது. (3)

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# சென்னை அணியிலிருந்து விடைபெற்றார் ஜடேஜா!




சென்னை சூப்பர் கிங் அணியில் இருந்து நட்சத்திர ஆல்ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா விடைபெற்று, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இணைந்துள்ளார்.

இதனை சென்னை அணி நிர்வாகம் தமது சமூக வலைத்தள பக்கத்தில் வீடியோ வெளியிட்டு சிறப்பு செய்துள்ளது.

2011 முதல் சென்னை அணியில் இருக்கும் ஜடேஜா 200 போட்டிகளில் விளையாடி 2,354 ஓட்டங்கள்,152 விக்கெட்டுகள், 94 பிடியெடுப்புக்கள் என அசத்தியுள்ளார்.

மினி ஏலத்துக்கு முன்பாக சஞ்சு சாம்சனுக்குப் பதிலாக ஜடேஜா ராஜஸ்தான் அணிக்குச் செல்கிறார்.

இறுதியாக சென்னை அணி ஐபிஎல் கிண்ணத்தை வெல்ல முக்கிய காரணமாக இருந்தவர் ஜடேஜா.

இதனால் ரசிகர்கள் மிகுந்த சோகத்தில் இருக்கிறார்கள்.

இது குறித்து சிஎஸ்கே தமது பதிவில் கூறப்பட்டுள்ளதாவது,

மஞ்சள் நிறத்தில் தைரியத்தினை வரலாறு பேசும்போது, உனது பெயரை எதிரொலிக்கும். நன்றி, ரவீந்திர ஜடேஜா எனக் கூறியுள்ளது. (3)

# இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்ற பாகிஸ்தான்

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் சார்பில், சதீர சமரவிக்ரம 42 ஓட்டங்ளையும், ஜனித் லியனகே 54 ஓட்டங்களையும், கமிந்து மெண்டிஸ் 44 ஓட்டங்களையும் மற்றும் வனிந்து ஹசரங்க 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்தும் 289 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணி சார்பாக பாபர் அசாம் 102 ஓட்டங்களையும், ஃபக்கர் ஜமான் 78 ஓட்டங்களையும், மொஹமட் ரிஷ்வான் 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அதன்படி குறித்த போட்டியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் கைப்பற்றியது. (3)


# University of Jaffna
## Registration of Suppliers for year-2026 Application

**01. Personal Details**

1.1 Name in Full :- ..............................................................
(As per the National Identity Card)
1.2 National I.D No :- ..............................................................
1.3 Address :- ..............................................................
1.4 Permanent T.P No:-...................... Mobile No:-.................... Fax No:-....................
1.5 Email Address :- ..............................................................

**02. Business Details**

2.1 Name of the Business :- ..............................................................
2.2 Business Registration No :- ..............................................................
(Copy of Business Registration Certificate should be attached)
2.3 VAT No :- ..............................................................
(If you are VAT registered supplier, Copy of VAT Certificate should be attached)
CIDA Registration No.................Grade Obtained...............Expiry Date ...............
2.4 Address :- ..............................................................
2.5 Permanent T.P No:-.................... Mobile No:-....................Fax No:-....................
(Please provide at least two contact numbers)
2.6 Email Address :- ..............................................................
2.7 District :- ..............................................................
2.8 Divisional Secretariat :- ..............................................................

**03. Other Details**

3.1 Name of the Bank & Account No :- ..............................................................
3.2 Credit Facilities :- ..............................................................
3.3 ICTAD Registration No :- ..............................................................
(For Engineering Services item 9.5, 9.9only) If not registered with ICTAD Applicant can submit quotation for works not exceeding Rs.200, 000.00 (Two Hundred Thousand only).
3.4 NMRA License No :- ..............................................................
(For Laboratory Items 6.1 and 6.2 only) Applicants without a valid NMRA License are not eligible to register for these categories.

**04. Details of Supply**

| Main Category No.(Eg:- 2) | Sub Category No. (Eg:- 2.2) | Name of the Sub Category (Eg:- Book, Magazines & other publications) |
|---|---|---|
| | | |
| | | |

**05. All Supply items should be delivered to the University of Jaffna**
**I/We agree to the conditions of Registration**
**Signature** :- ..............................................
**Name** :- .............................................. **Date:-** ..............................................

**Note**
**Separate application should be sent for each category supply / services and each application should accompany with a deposit slip copy of Rs.2000/= (non refundable deposit) drawn Deposit to the Account no 85000039000926 in the People's Bank, University of Jaffna.**



# கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் திரு.மோகனதாஸ் ஜீர்த்தன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். மோகனதாஸ் மேரி ஸ்ரெல்லா



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1708)

பிறப்பு 07.01.1954
இறப்பு 15.11.2025

ஆழ்ந்த அனுதாபங்களுடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 519
16.11.2025


# அடம்பன் கொடியாய் திரளுமா தமிழர் தேசம்?

அபிமன்யு



2009ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலம் என்பது அச்சுறுத்தல்கள், கைதுகள், அடக்குமுறைகள் என்பன அதிகம் இருந்த காலமாயினும் தமிழர்களிடம் ஒற்றுமை மேலோங்கி இருந்தது என்பதை இவ்விடத்தில் ஆணித்தரமாகக் கூறித்தான் ஆகவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத பலத்தில் மேலோங்கி இருந்தனர் என்றாயினும் தமிழர் தாயகத்தின் அரசியல் தளத்தில் ஒருமித்த சக்தியாய் தமிழினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதும் தமிழர் பலத்தை உலகிற்குப் பறைசாற்றவும் முற்பட்டனர். இதில் வெற்றியும் கண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒப்பற்ற கட்டமைப்பு மிக்க அமைப்பை உருவாக்கி தமிழினத்தின் ஏகபிரதிநிதியாக அவர்களைப் பாராளுமன்றில் பேச வைத்தனர்.

இந்தக் குரல் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற குரலாக மாற்றமடைந்தது.

என்ன செய்வது. காலத்தின் கோலம். இறுதி யுத்தத்தின் பின்னர் அதன் பலம் கேள்விக்குறியாகியது.

“பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்ற கோட்பாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பகால உறுப்பினர்கள் சிலர் அதிலிருந்து விலகிச் செல்ல புதிய வரவுகள் உள்வாங்கப்பட்டன.

இந்த நிலை தொடர்ந்து மாற்றமுறும் வகையில் இருந்ததன் விளைவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பல பிளவுகள் ஏற்பட்டன.

இந்தப் பிளவுக்கு பதவி ஆசை மற்றும் தனிமனித குரோதங்கள் என்பனவே காரணம் என அதன் உறுப்பினர்கள் வெளிப்படையாகப் பேசியிருந்தனர்.

ஆயினும் இந்தப் பிளவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மறைந்த இரா.சம்பந்தன் சரி செய்வார் என தமிழ் மக்கள் நம்பியபோது அவர் இதுதொடர்பில் அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிளவை அவர் ஆதரிக்கின்றாரோ என்று தமிழ் மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

இரா.சம்பந்தனின் மறைவுக்குப் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பு யாருக்கு என்ற பிரதிவாதங்கள் எழுந்த நிலையில், தமிழரசுக் கட்சிக்குள் பெரும் பூகம்பம் வெடித்தது.

> அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பார்கள். தமிழர்களாகிய நாமும் அடம்பன் கொடிதான். ஆனால் திரள் அதற்கு திராணி இல்லாமல் அடம்பன் கொடியாய் ஆங்காங்கே மண்டிக்கிடக்கிறோம்.

அந்தப் பூகம்பம் தலைமைப் பொறுப்புக்கான பூகம்பமாக வியூகம் எடுத்து இரு அணிகளாய்ப் பிரிந்து செயற்படத் தொடங்கின.

கிரந்தம் முத்திப் பௌத்திரம் ஆவதாய் இவ்விடயம் நீதிமன்றம் வரை சென்று இன்றுவரை இழுபறி நிலையிலேயே இருந்து வருகிறது.

தமிழினத்தின் ஒற்றுமையைப் பிரித்தாளும் சக்திகளின் ஒப்பற்ற சிந்தனை இவ்விடயத்தில் நூறு விகிதம் நிறைவாய் முடிந்தது என அரசியல் ஆய்வாளர்கள் கூறியிருந்தமையினை இங்கு நினைவுபடுத்தியே ஆகவேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் இருந்த ஒற்றுமையீனம், பதவிநோக்கம் என்பன தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதில் இருந்து அவர்களை வழுவச் செய்தது என்பதே மெய்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நகர்வுகளும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பெற்றுத் தருவதற்கானது என்பதை விடுத்து தமது சொந்த அரசியல் இருப்பைத் தக்க வைக்கும் களமாக மாறியிருந்தது வேதனையான விடயம்.

தமிழ் கட்சிகளிடையே இருந்த பிளவும் ஒற்றுமையீனமும் தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருந்ததாயினும் ஏதோவொரு வழியில் அவர்களை ஆதரித்துக் கொண்டேயிருந்தனர்.

ஆயினும் தமிழ் மக்களின் ஆள்மனதைப் புரிந்து கொள்ள மறந்த தமிழ்க் கட்சிகளைத் தூக்கி எறிய முற்பட்டனர் தமிழ் மக்கள்.

இதன் வெளிப்பாடே கடந்த பாராளுமன்றத் தேர்தலில் [illegible] வரலாற்றைப் புரட்டிப் போடும் செயலைத் தமிழ் மக்கள் செய்திருந்தனர்.

தெற்குக் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் மூன்று ஆசனங்கள் கிடைத்தன.

அப்போதுகூட தமிழ் மக்களின் மனக் கிடக்கைப் புரிந்துகொள்ளாத தமிழ்த் தரப்பு, தமது தோல்விக்கான காரணியைத் தேட மறந்து மீண்டும் ஒற்றுமை பற்றியும் தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைவது பற்றியும் பேசிக் கொண்டனர்.

ஆயினும் அவை வெறும் பேச்சுக்களுடனேயே முடிவடைந்ததே தவிர அந்தக் கூட்டு இணையவே இல்லை.

நாம் கூட்டுச் சேர்வது தமிழ் மக்களின் நலன் சார்ந்தா? எமது அரசியல் இருப்பை நிலை கொள்ளச் செய்யவா? என்ற முற்றுப்புள்ளியைச் சுற்றியவர்களுக்கு தனிமனித அரசியல் விருப்பு, வெறுப்பு தோல்வியையே பரிசாகத் தந்தது.

தெற்கு அரசியல் கட்சிகள் வடக்கில் நிலை கொண்டுவிடக்கூடாது எனக் கூட்டுச் சேர காலில் சக்கரம் கட்டி அலைபவர்கள், தமிழ் மக்கள் நலன்சார்ந்து ஒன்று கூடவில்லை என்ற உண்மையை தமிழ் மக்கள் நன்கறிந்துள்ளனர்.

நிலை இவ்வாறு இருக்கையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல்.திருமாவளவன் ஒரு முக்கிய விடயம் ஒன்றைப் பேசியிருக்கிறார்.

அதாவது, தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றுசேரா விட்டால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டமுடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சாதகமான சூழல் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. குறித்த சாதகமான சூழலை தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் பயன்படுத்த வேண்டும்.

எமது அருமைச் சகோதரர்களே! நாம் அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்பதே கேள்வி. சிதறிக் கிடக்கும் தமிழர்களை ஒன்றிணைக்க வேண்டும். அதுவே இன்றைய தேவை என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

சல்லிகளாய் சிதறிக் கிடக்கும் தமிழினத்தை ஒன்று சேர்ப்பதற்கு முன் சுயநல அரசியல் நோக்கங்களால் பிரிந்து நிற்கும் தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். 2009இற்கு முற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாய் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம்.

இந்த விருப்பை தமிழ்க் கட்சிகள் நிறைவேற்றினால் ஆங்காங்கே பிரிந்து நிற்கும் அடம்பன் கொடிகள் ஒன்றாய்த் திரளும். அந்தத் திரட்சி எம்மையும் எம் இனத்தின் ஒற்றுமையையும் உலகிற்கு பறை சாற்றும். இது சர்வ நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## எங்கள் மண்ணுக்குப் பெருமை தரும் எங்கள் பேராளர்களைப் போற்றுவோம்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

07.11.2025 இல் வெளியாகிய வர்த்தமானியில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எனினும் தமிழ் மொழியில் பிரசுரமான வர்த்தமானியில்; தமிழ் மொழி மூலமான விஞ்ஞான பாடம் மற்றும் கணித பாடத்திற்கு விண்ணப்பம் கோரப்படவில்லை.

அதேநேரம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் வெளிவந்த வர்த்தமானியில் தமிழ் மொழி மூலமான விஞ்ஞான பாடம் மற்றும் கணித பாடத்திற்கு ஆசிரியர் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே தமிழ் மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட தவறு காரணமாக எங்கட பிள்ளைகள் தமிழ் மொழிமூல விஞ்ஞான பாடத்திற்கும் கணித பாடத்திற்கும் விண்ணப்பிக்காமல் விடக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

ஆகையால இது தொடர்பில எங்கட பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தி, குறித்த தமிழ் மொழி மூலமான விஞ்ஞான- கணித பாடங்களுக்கும் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்த வேணும்.

**கங்காணி:-** நல்லதொரு விடயத்தை எங்கட விதானையார் சொல்லியிருக்கிறார்.

அதேநேரம் இது தொடர்பில எங்கட வடக்கு ஆளுநர் கல்வி அமைச்சுக்கு அறிவித்து குறித்த தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு ஆலயடியில ஒரு கோரிக்கையை முன் வைப்பம் எனக் கூற, அதனை ஆலடியில் இருந்தவர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

**பண்டிதர்:-** எங்கட ஈழத்தமிழ் அறிஞர்களின்ர ஆற்றலையும் புலமையையும் இந்திய தேசம் தக்க முறையில் பயன்படுத்துவதுடன் அவர்களுக்கு உரிய கௌரவத்தையும் வழங்கி வருகுது.

உண்மையில இது எங்கட ஈழத் தமிழ் மக்களுக்குப் பெருமை தருவதாகும்.

**மூப்பர்:-** என்ன பண்டிதர் ஐயா! சொல்லுறியள். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**பண்டிதர்:-** 140 கோடி மக்களின் தலைவரான இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் அயோத்தியில் இராமர் கோயிலுக்கு மகா கும்பாபிசேகம் நடத்துவதற்கு முன்னதாக, தமிழ் நாட்டிற்கு வருகை தந்து இராமேஸ்வரத்தை தரிசித்தார். இதன் போது கம்பராமாயணத்தை பிரதமர் மோடி அறிய விரும்பினார்.

அவருக்கு கம்பராமாயணத்தை எடுத்துக் கூறுவதற்காக, எங்கட கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களை அழைத்து பிரதமர் மோடிக்கு கம்பராமாயணத்தை எடுத்துக் கூறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்றால், அது எங்கள் ஈழத் தமிழ் மண்ணுக்கு எத்துணை பெருமை.

இதுபோல எங்கள் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களை தமிழகத்திலுள்ள திருச்செந்தூர் முருகன் ஆலய நிர்வாகம் கந்தசஷ்டி காலத்தில் தொடர் சொற்பொழிவாற்ற அழைத்து இலட்சக் கணக்கான மக்கள் அவரின் சொற்பொழிவைக் கேட்பதற்கு வகை செய்கிறது.

கடந்த ஆறு ஆண்டுகளாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் தொடர் சொற்பொழிவாற்றுவது எங்கள் தமிழருக்கு எத்துணை பெருமை.

அதுமட்டுமல்ல, தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்த மாமன்னன் இராஜஇராஜ சோழனின் குருபூசைத் தினப் பெருவிழாவிற்கு கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களை அழைத்து அந்நிகழ்வில் அவரைப் பங்கேற்க வைத்ததுடன் மாமன்னன் இராஜஇராஜ சோழனின் திருவுருவுக்கு கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் எனில், எந்தளவுக்கு எங்கள் ஈழத்து தமிழ் அறிஞர்களை இந்திய தேசம் உரிய மதிப்புக் கொடுத்துக் கௌரவிக்கிறது என்பதை நாம் உணர முடியும்.

உண்மையில் இது அவர்களுக்கான மதிப்பன்று. அது எங்கள் ஈழத் தமிழ் மண்ணுக்கான கௌரவம்- எங்கள் ஈழத்தமிழ் அறிஞர்களுக்கான கௌரவம்.

இதுபோல எங்கள் மரியாதைக்குரிய மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயாவுக்கு இந்திய தேசம் உரிய கௌரவத்தையும் மதிப்பையும் கொடுத்து வருகிறது.

இந்திய அரசியல் தலைவர்களைச் சந்திக்கின்ற பேராற்றல் எங்கள் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயாவுக்கு உண்டு என்பதை நாம் அறியாமல் இருந்தால், அது வரலாற்றுத் தவறாகும்.

இது போல அண்மைக் காலமாக எங்கள் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த சகோதரன் இராசையா வாகீசன் அவர்களின் கவிவரிகள் - பாடல் கள்- கருத்தாழம் மிக்க வசனங்களுக்கு தமிழகத்து தொலைக்காட்சிகள் முன்னுரிமை கொடுத்து வருகின்றன.

சகோதரன் வாகீசன் எங்கள் தாய கத்தை- எங்கள் யாழ்ப்பாண மண்ணை- இணுவையூரை உச்சரிக்கும் போதெல்லாம் எம் மனம் புளகாங்கிதம் அடைகிறது. .

அவர்போல எங்கள் ஈழத்தமிழ் இளைஞர்களின் ஆற்றல்கள் தமிழகத்து தொலைக் காட்சிகள் மூலம் வெளிப்பட வேண்டும்.

எங்கள் இளைஞர்களின் கலைத்திறனுக்கான நல்லதொரு களமாக அது அமைய வேண்டும் என்பது தான் என்ர விருப்பம்.

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கூற, அதனை ஆமோதித்த வாத்தியார் வைத்திலிங்கம் , எங்கள் நாதஸ்வர மேதை பாலமுருகன் அவர்களுக்கு அமெரிக்க மாநில ஆளுநர்கள் அவரின் நாதஸ்வர இசையின் உன்னதத்தை கௌரவித்து உயரிய விருதுகளை வழங்கியுள்ளனர்.

உண்மையில் எங்கள் யாழ்ப்பாணத்து நாதஸ்வர மேதை பாலமுருகன் பெற்ற விருது கண்டு மனம் நிறைந்த மகிழ்வடைகிறது.

**விதானையார்:-** உண்மைதான். இன்றைய ஆலடியில் எங்கள் ஈழத்திருநாட்டின் அறிஞர் பெருமக்களை, ஆற்றலாளர்களை, கலைஞர்களை பாராட்டியமையையிட்டு உண்மையிலேயே நான் மனம்நிறைவடைகின்றேன்.

எப்பவும் குறை அளக்கிறது மட்டும் என்றில்லாமல், நம்மவர்களின் பெருமைகளை நாம் பேச வேண்டும்.

நம்மவர்களின் பெருமையை நாம் பேசாவிட்டால், யார் பேசுவார்கள் இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**வியாசரே ஒவ்வொரு குடிமகனும் தனது பிள்ளைகளுக்காக போதைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தால் என்னாகும்?**

சாயிசெல்வம் - பருத்தித்துறை

எனது பிள்ளையை போதை நிறைந்த இந்த கொடிய மண்ணில் வாழவிட்டுவிட்டு என்னால் எப்படி நிம்மதியாகக் கண்மூட முடியும் சொல்லுங்கள்.

எமது பிள்ளைச் செல்வங்களின் கைகளில் போதையைத் திணிக்கும் போதை வியாபாரிகளைப் பிடித்து பெற்றோரிடம் கொடுக்கும் சட்டம் இயற்ற வேண்டும்.

அவர்களை பொதுவெளியில் வைத்து பிஞ் சுக் கரத்திற்குள் போதை திணித்த அந்தக் கொடிய கரத்தை ஒவ்வொன்றாய் ஒழுக்கவழிசெய்யவேண்டும்.

சட்டங்கள் இன்னும் கடுமையாக்கப்பட எல்லாம் சரியாக நடக்கும். போதையில் சொத்துச் சேர்த்தவன் போதையாலேயே அழிவான். இது சர்வ நிச்சயம்.



2026 பட்ஜெட்டில் சாதாரண பொது மக்களுக்கு எந்தச் சலுகையும் இல்லையே வியாசரே?

**கல்லறை மேனியரை, எம் காவிய நாயகரை கவிபாட முடியுமா வியாசரே?**

கேதீஸ் - கீரிமலை

தன்னலம் இல்லாத எம் சரித்திர நாயகரே! வெந்தணலின் மீதேறி வீர காவியமாடிய வேங்கையரே! தாய் மண்ணை நேசித்து-சுவாசித்து நெடுதூரம் சென்ற மறவர்களே, இங்கோர் ஈழம் படும் வேதனையை அறிவீரோ? நாடாய் உயர்ந்த நம் இனம் வாள் வெட்டிலும் போதைவஸ்திலும் மூழ் கிக்கிடக்கிறதே! இனி என்னாகுமோ ஈழம்? நெஞ்சில் துடிக்கும் இரத்த நாளங்களில் உங்கள் நினைவுடன் ஈழத்தமிழினம் கண்ணீரில் கரைகிறது...

**அனேகமான பெண்கள் வெளிநாட்டுக்கு சென்று விட வேண்டும் என ஏன் விரும்புகிறார்கள் வியாசரே?**

பிரியன் - கிளிநொச்சி

பணம், வெளிநாடு எனும் பகட்டு வாழ்க்கை அவ்வளவுதான்.

வெளிநாடு என்று ஆசையோடு ஓடும் பலரின் வாழ்க்கை நான்கு சுவர்களுக்குள்ளேயே முடிந்து விடுகிறது என்பது பலருக்குத் தெரிவதில்லை.

வெளிநாடு ஒரு பகட்டு வாழ்க்கை. எம் நாடு போல அடி வளவில் நான்கு தென்னை, கிணற்றடியில் பத்து வாழை, முற்றத்தில் தேசியும் கொய்யாவும் பக்கத்தில் பலாவும் பப்பாளியும்.

வீட்டோரத்தில் ஆடு-மாடு. அதற்கு உணவிற்கு கிழுவை வேலி. வேலிக்கு வெளியே செல்லாதபடி பத்துக் கோழி. பாரினிலே எம் தேசம் போல் வேறுண்டோ?

நல்ல வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, வழுக்கைக்கு வாழ்க்கைப்பட்டு வாழ்வா இதுவென்று வாழ்வதுதான் வெளிநாட்டு வாழ்க்கை.

**2026 பட்ஜெட்டில் சாதாரண பொது மக்களுக்கு எந்தச் சலுகையும் இல்லையே வியாசரே?**

விஜயதரன் - உரும்பிராய்

எமது நாடு செல்வச் செழிப்பு மிக்க நாடல்ல. இருந்த செல்வத்தையும் கொள்ளையடித்தவர்கள் நிறைந்த நாடு.

இருக்கும் கடனையே கட்ட முடியாத நிலை இருக்கும் போது சாதாரண மக்களுக்கு சலுகைகளைத் தந்தால் அது இன்னும் எம்மை இருளை நோக்கிச் செல்ல வைக்கும்.

இருக்கும் வேலையை கைவிடாது வீட்டில் இருக்கும் நிலத்துண்டில் தன்னிறைவு தரக் கூடிய விளைபொருட்களை விளைவித்தால் அது வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத்தோட்டம் இருந்தால் ஏன் மரக்கறிச் சந்தைக்குப் போக வேண்டும்.

கலக்கம் வேண்டாம். சலுகைகளைக் கேட்டு வாங்கி சோம்பறியாகிவிட வேண்டாம்.

**தன்னலம் கருதாத தாயன்பை புரிந்து கொள்ளாத பிள்ளைகள் பற்றி?**

கார்மேல்-கொடிகாமம்

காதலிக்கு பரிசளிக்க தன் தாயின் நெஞ்சைப் பிளந்து அவள் இதயத்தைப் பிடுங்கிக் கொண்டு காதலியிடம் ஓடுகிறான் மகன்.

எப்படியாவது அந்த இதயத்தின் துடிப்பு நிற்பதற்குள் காதலியிடம் அதைக் கொடுத்து விட வேண்டும் என்று வேகமாக ஓடியவன் கால் தடக்கி கீழே வீழ்ந்துவிட்டான்.

அப்போது அவன் கையில் இருந்த தாயின் இதயம் அவரிடம் கேட்டது வலிக்கிறதா மகனே என்று.

**விபத்துக்களைத் தடுக்க ஏதும் வழியுண்டா வியாசரே?**

ரவி - சங்கானை

வீதி விதிகளை மதித்து நடந்தாலே போதுமானது. இப்போது எம்மவர்களுக்கு அவசரம்.

மோட்டார் சைக்கிளை இயக்கியதும் நான்கு கியர்களையும் மாற்றிவிட்டு முறுக்க வேண்டியதுதான். முன்னால் வருபவர், பின்னால் வருபவர், அருகில் வருபவர், ஒழுங்கையில் இருந்து வீதிக்கு வருபவர் என்று எவரையும் பார்ப்பதில்லை.

எங்காவது பொலிஸ் நின்றால் பிரதான விளக்கை ஒளிரவிட்டுக் காட்டி அடுத்தவனை எச்சரிக்கை செய்யும் சமூக சிந்தனை இப்போதும் அப்படியே இருக்கிறது.

**மாவீரர்களின் அபிலாசைகளைப் புரிந்துள்ளோம் எனக் கூறும் கடற்றொழில் அமைச்சரின் அரசு தமிழர்களுக்குத் தீர்வை தருமா?**

சுதன் - குப்பிழான்

இனப்பிரச்சினை என்பது சூட்கேசில் பூட்டி வைத்திருக்கும் பொருள் அல்லவே. அது நாற்பது வருட சிக்கல்களுக்குள் சிதைந்த இன ஒற்றுமை.

எமக்குத் தரப்பட வேண்டியவை எவையோ அவற்றைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அது கிடைக்கும். அடுத்த சந்ததிக்கும் கடத்தப்படும்.

எம் தாய் மண்ணுக்காக தம் அருமந்த உயிர்களை ஈகம் செய்த உன்னத தெய்வங்களை நினைவேந்த எமக்குரிமையுண்டு.

அந்த உரிமையை அடுத்தவர் தருவார் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதே அபத்தமானது.

ஆரம்பம் உண்டேல் முடிவு நிச்சயம். இதுவே சர்வ நிச்சயம்.

**அரசைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் படாத பாடு படுவதேன் வியாசரே?**

தமிழ் - யாழ்ப்பாணம்

அதனால்தான் அதற்குப் பெயர் எதிர்க்கட்சி.



கல்லறை மேனியரை, எம் காவிய நாயகரை கவிபாட முடியுமா வியாசரே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசன மதிப்பீடு

# வளர்ச்சி விகிதம்

| | |
|---|---|
| சிங்களவர் | 0.4 |
| தமிழர் | 1.3 |
| முஸ்லிம் | 1.5 |

இலங்கை அரசால் அண்மையில் வெளியிடப்பட்ட குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பு அறிக்கைத் தரவுகளின்படி சிங்களர், இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் சனத்தொகையில் அதிகரிப்பு காணப்படுகின்ற போதிலும், மலையகத் தமிழர்களின் சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை நாட்டில் பேசுபொருளாகியுள்ளது.

2024ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பு அறிக்கையை, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அண்மையில் வெளியிட்டிருந்தது.

இலங்கையில் 15ஆவது தடவையாக இந்த குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பு நடாத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் முதல் தடவையாக விஞ்ஞான ரீதியான தொகை மதிப்பு 1871ஆம் ஆண்டு நடாத்தப்பட்டுள்ளது.

15ஆவது குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பு 2021ஆம் ஆண்டு நடாத்தப்படவிருந்த நிலையில், கொவிட் - 19 பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகிய காரணங்களால் இந்த நடவடிக்கை 2024ஆம் ஆண்டு நடாத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நடாத்தப்பட்ட குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் பிரகாரம், இலங்கையில் இரண்டு கோடியே பதினேழு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து நூற்று எழுபது (2,17,63,170) பேர் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பில் அறிக்கையிடப்பட்ட மொத்த சனத்தொகையைவிட, 2024ஆம் ஆண்டு சனத்தொகை பதினான்கு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பத்தொன்று (1,403,731) பேர் அதிகமாக உள்ளனர்.

2001 முதல் 2012ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சனத்தொகை சராசரியாக வருடத்திற்கு 0.7 வீதத்தினால் காணப்பட்டதுடன், அந்த வளர்ச்சியானது 2012 முதல் 2024ஆம் ஆண்டு வரை 0.5 வீதமாக பதிவாகியுள்ளது.

இதன்படி, இலங்கையின் சனத்தொகை குறைந்த வேகத்திலேயே வளர்ச்சியடைந்துள்ளதாக குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மாகாண ரீதியாக சனத்தொகையை கருத்திற்கொள்ளும் பட்சத்தில், முழு சனத்தொகையில் 28.1 வீதமானோர் மேல் மாகாணத்தில் வசிக்கின்றனர். 5.3 வீதத்தையும்விட குறைவானோர் தமிழர்கள் அதிகளவில் செறிந்து வாழும் வடமாகாணத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

அதிகளவான சனத்தொகையை கொண்ட மாவட்டமாக கம்பஹா மாவட்டம் (2,433,685) பதிவாகியுள்ளது. இரண்டாவது அதிக சனத்தொகையை கொண்ட மாவட்டமாக கொழும்பு மாவட்டம் ( 2,374,461)



உள்ளது.

இதேவேளை, சனத்தொகை குறைந்த மாவட்டங்கள் பட்டியலில் தமிழர்கள் அதிகளவில் செறிந்து வாழும் முல்லைத்தீவு (122,542), மன்னார் (123,674), கிளிநொச்சி (136,434) மற்றும் வவுனியா (172,257) ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

எனினும், குறைவான சனத்தொகையை கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 2.23 என்ற வீதத்திலான அதியுயர் வளர்ச்சி வீதத்தினை காணமுடிகின்றது என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 0.01 எனும் குறைந்த வளர்ச்சி வீதத்தினை கொண்ட மாவட்டமாக வவுனியா மாவட்டம் பதிவாகியுள்ளது.

**1871 முதல் 2024 வரையான சனத்தொகை வளர்ச்சி**

இலங்கையில் முதல் தடவையாக விஞ்ஞான ரீதியான சனத்தொகை மதிப்பு 1871ஆம் ஆண்டு நடாத்தப்பட்டுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இதன்படி, 1871ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சனத்தொகை மதிப்பின் பிரகாரம், இலங்கையில் 24, 00,380 மக்கள் வசித்துள்ளனர்.

ஒவ்வொரு 10 வருடங்களுக்கு ஒருமுறை சனத்தொகை மதிப்பு செய்யத் தீர்மானிக்கப்பட்டு வந்த பின்னணியில், அந்த செயற்பாடு 1931ஆம் ஆண்டு வரை முறையாக நடாத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 1946ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பு நடாத்தப்பட்டதுடன், அதன்பின்னர் 1953ஆம் ஆண்டு நடாத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 1963, 1971, 1981ஆம் ஆண்டுகளில் முறையாக நடாத்தப்பட்ட நிலையில், 1981ஆம் ஆண்டுக்கு பின்னர் அடுத்த கணக்கெடுப்பு 20 வருடங்கள் கழித்து 2001 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது.

உள்நாட்டு போர், கலவரங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் சனத்தொகை மதிப்பு 20 வருடங்களுக்கு பிற்போட காரணமாக அமைந்திருந்ததாக கூறப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டுக்கு பின்னர் 2012ஆம் ஆண்டு மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் இந்த சனத்தொகை மதிப்பு நடாத்தப்பட்டது.

**சனத்தொகை வளர்ச்சி வீதம் படிப்படியாக குறைய காரணம் என்ன?**

இலங்கையில் 153 வருட சனத்தொகை மதிப்பீட்டு வரலாற்றில் வருடாந்த வளர்ச்சி வீதம் பெரும்பாலும் படிப்படியாக குறைவடைந்து செல்வதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

நாட்டில் இதுவரை நடாத்தப்பட்டுள்ள 15 முறையான சனத்தொகை மதிப்பீடுகளில் 1953ஆம் ஆண்டு வருடாந்த சனத்தொகை வளர்ச்சி அதி உயர்ந்த வீதமாகிய 2.8 வீதமாக பதிவாகியுள்ளது.

அதன்பின்னராக சனத்தொகை மதிப்பு அறிக்கைகளின் பிரகாரம், சனத்தொகையின் வருடாந்த வளர்ச்சி வீதம் படிப்படியாக குறைவடைந்து செல்கின்றது.

2012ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பில் 0.7 வீதமாக காணப்பட்ட சனத்தொகை வளர்ச்சி வீதம், 2024ஆம் ஆண்டு 0.5 வீதமாக குறைந்துள்ளது. இலங்கையில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைவதற்காக பல்வேறு விடயங்களை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் பட்டியலிட்டுள்ளது.

நீண்டகாலமாக காணப்படும் குறைந்த பிறப்பு வீதம், அதிகமான இறப்பு வீதம் மற்றும் நாட்டில் வெளிநோக்கிய இடப்பெயர்வு அதிகரித்தல் போன்ற காரணங்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் பட்டியலிடப்பட்டுள்ளன.

அத்துடன், உரிய காலத்தில் பரவும் நோய்கள் மற்றும் தொற்றுநோய் நிலைமைகள், போர் நிலைமைகள் போன்றவற்றை அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், சராசரி வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் நேர்மறையான மதிப்பினை காட்டுவதன் மூலம் இலங்கையின் சனத்தொகை குறைந்த வீதத்திலேனும் படிப்படியாக வளர்ச்சியடைந்து நிலைமையை காணமுடிகின்றது என சனத்தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

**சிங்களவர்களே நாட்டில் அதிகம்**

இலங்கையில் 2024ஆம் ஆண்டு குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பு அறிக்கையின் பிரகாரம், சிங்கள மக்களே அதிகளவில் காணப்படுகின்றனர்.

- இலங்கையில் சிங்கள மக்களின் தொகை 1,61,44,037ஆக இம்முறை பதிவாகியுள்ளது. 2012ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம், நாட்டிலிருந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை 1,52,50,081 ஆகும். 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி வீதமானது, 0.4ஆக பதிவாகியுள்ளது.
- சிங்களவர்களுக்கு அடுத்தபடியாக இலங்கைத் தமிழர்கள் அதிகளவில் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். 2012ஆம் ஆண்டு 22,69,266 ஆக காணப்பட்ட இலங்கைத் தமிழர்கள், 2024ஆம் ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம், 26,81,627ஆக பதிவாகியுள்ளனர். 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி வீதமானது, 1.3ஆக பதிவாகியுள்ளது.
- இலங்கை முஸ்லிம் மக்களின் தொகையானது, 2012ஆம் ஆண்டு 18,92,638ஆக காணப்பட்டது. அது 2024ஆம் ஆண்டு 22,83,246ஆக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சியானது, 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.5ஆக காணப்படுகின்றது.
- எனினும், மலையக தமிழர்களின் (இந்திய வம்சாவளித் தமிழர்கள்) சனத்தொகை வளர்ச்சியானது, 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.6 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. மலையக தமிழர்களின் (இந்திய வம்சாவளித் தமிழர்கள்) தொகையானது, 2012ஆம் ஆண்டு 8,39,504ஆக காணப்பட்டது. அது 2024ஆம் ஆண்டு 6,00,360ஆக பதிவாகியுள்ளது.

பிபிசி தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வாசலில் விமானம்

## ஆச்சரியமூட்டும் அமெரிக்கா!



அமெரிக்காவில் உள்ள ஒரு நகரத்தில் மக்கள் வீட்டை விட்டு வெளியே வந்தாலே விமானம் இருக்கும், தெருக்கள் தான் இங்கு விமான ஓடுதளங்கள். படிக்கவே ஆச்சரியமாக உள்ளதா? இந்த நகரம் பற்றி விரிவாக தெரிந்துகொள்ளலாம்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் அமைந்துள்ள "கேமரூன் ஏர்பார்க்" என்ற இந்த நகரம் குறித்த வீடியோ ஒன்று இன்ஸ்டாகிராமில் வெளியாகி கவனம் பெற்று வருகிறது. இந்த வீடியோவின்படி, கார்களுக்குப் பதிலாக விமானங்கள் நிறைந்திருக்கும் ஒரு குடியிருப்புப் பகுதி காட்சியளிக்கிறது.

வைரலாகும் வீடியோவில், வீடுகளுக்கு வெளியே சிறிய ரக விமானங்கள் நிறுத்தப்பட்டிருப்பதை காண முடிகிறது. இந்த விமானங்கள் வெறும் பொருட்கள் அல்ல.

நகரத்தின் தெருக்கள் அகலமாக வடிவமைக்கப்பட்டுள்ளதால் நேரடியாக தெருவில் ஓட்டிச் சென்று, அங்கிருந்தே வானில் பறக்க முடிகிறது.

தெருவின் நடுவே அமைக்கப்பட்டுள்ள ரன்வே இதற்கு உதவியாக உள்ளது.

இந்த நகரத்தின் மற்றொரு சிறப்பம்சம், இங்குள்ள போக்குவரத்து சிக்னல்கள், வழக்கத்தைவிட தாழ்வாக அமைக்கப்பட்டுள்ளன. விமானங்களின் இறக்கைகள் மீது மோதாமல் இருப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கேமரூன் ஏர்பார்க் 1963 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஓய்வுபெற்ற இராணுவ விமானிகளுக்காக உருவாக்கப்பட்டது. காலப்போக்கில், இங்கு பணியில் இருக்கும் விமானிகளும் குடியேறத் தொடங்கினர். தற்போது விமானப் போக்குவரத்து மீது ஆர்வம் கொண்ட பலரும் இங்கு வசித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆச்சி அறிவுரை



## எங்கள் வீட்டுக் குப்பை ஏன் வீதிக்குச் செல்ல வேண்டும்? பேராண்டி...

தண்டனைகள் கடுமையாகும் போது தவறுகள் குறைக்கப்படும் எண்டு சொல்லுவினம். அது என்னவோ உண்மைதான்.

வெளிநாடுகள் ஏன் வளர்ச்சியடைந்த, செல்வம் கொளிக்கும் நாடா இருக்குதெண்டு எப்பவாவது நினைச்சிருக்கிறியா பேராண்டி.

வெள்ளைக்காரரிட்டை தங்கட சூழலைச் சுத்தமா வைச்சிருக்கிற சிந்தனை இருக்குது. சூழல் சுத்தமா இருந்தால்தான் வீடு சுத்தமா இருக்கும் எண்டுறத நம்புற ஆக்கள்.

2022 - FIFA உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத்தின்போது ஜப்பான் அணியும் இங்கிலாந்து அணியும் விளையாடிச்சுது. போட்டி முடிஞ்சதும் விளையாட்டு அரங்கத்திலை ரசிகர்கள் போட்ட குப்பைகள், குடிநீர் போத்தல்கள், பேப்பர்களை எல்லாம் சேகரிச்சு மூட்டையாக் கட்டி வைச்சிட்டு ஜப்பான் வீரர்கள் சென்றினம். இந்தச் செய்தி அப்ப பெரிசாப் பேசப்பட்டது பேராண்டி.

ஜப்பான் ஏன் இவ்வளவு வளர்ச்சியடைந்த நாடா இருக்கெண்டு இப்ப விளங்குதா? ஆனால் எங்கட ஆக்கள் தங்கட வீடு மட்டும் சுத்தமா, வடிவா இருந்தால் போதும் சூழலாவது மண்ணாங்கட்டியாவது எண்டு, ஸ்கூட்டிப்பப் கால் மிதிக்குள்ள குப்பைப் பையை வைச்சுக் கொண்டுபோய், ஆற்றையேன் வீட்டு வாசலில தட்டிப் போட்டுப் போகினம்.

நல்லூர் பிரதேச சபை, வீதிகளில குப்பை கொட்டுற ஆக்களின்ர CCTV வீடியோக்களை வெளியிட்டு இருக்கினம். அப்பிடிச் செய்தாலாவது குப்பை கொட்டுறது நிக்குமெண்டு பார்த்தால், பல்கலைக்கழகத்தில படிக்கிற பொம்பிளப் பிள்ளைகளே, பொறுப்பில்லாமல் நடுச்சாமம் வீதிகளில குப்பைகளைப் போடுகினம். அவை குப்பை போடுகிற வீடியோக்களும் வெளிவந்திருக்குது.

பேராண்டி, கழிவு முகாமைத்துவம் பெரிய சிக்கலுக்குரிய விடயம் தான், அதை சரியாகக் கையாளவேணும். வாராந்தம் பிரதேச சபைகள், மாநகர சபைகள் குப்பை சேகரிக்கிற வாகனத்திலை தவறாமல் வந்தால் ஓரளவு இதுகளைக் குறைக்கலாம். அதுகள் சரியா நடக்குதா எண்டு சபையின்ர கழிவகற்றல் பிரிவுகள் அவதானிக்கவேணும்.

அதோட குப்பை எடுக்கிறதுக்கு காசு எப்பிடி வழங்கவேணும் எண்டுற விழிப்புணர்வும் தேவை. ஏனெண்டால் சில இடங்களில குப்பை எடுக்க வாரவையும் காசு கேக்கினம், வாங்கினம்.

சிங்கப்பூர் ஜனாதிபதி இலங்கைக்கு வந்து: இன்னும் சில வருசத்திலை சிங்கப்பூரை இலங்கை ஆக்குறன் எண்டார். ஆனால் இப்பத்தைய சிங்கப்பூரின்ர வளர்ச்சி எப்படி? எங்கட வளர்ச்சி எப்பிடி?

அங்க எச்சில் துப்பினாலே தண்டனைக்குரிய குற்றம். எண்டைக்கு நாங்கள் பொது மலசலகூடங்களை அசுத்தம் செய்யாமல் சுத்தமா வைச்சிருக்கிறமோ அண்டைக்குத்தான் எங்கட நாடு முன்னேறும்.

எங்கட வீட்டுக் குப்பையை அடுத்தவன் வளவுக்குள்ள போடுறது தான் எங்கட வளர்ச்சி எண்டால் நாங்கள் இன்னும் வீழவே செய்வம் பேராண்டி.

**ஆச்சி வருவா...**

**மாவை.நா.கஜேந்திரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தப் பாலைக் காய்ச்ச வேண்டும்; எந்தப் பாலைச் சூட வைக்க வேண்டும்?





அப்பா டீ குடிக்கும்போது ஒருமுறை, குழந்தைக்குப் பாலூட்ட ஒருமுறை எனப் பாலை பலமுறை சுட வைக்கும்போது, இது சரிதானா? என்று யோசித்துப் பார்த்தது உண்டா?

"பாலை பலமுறை சுட வைப்பது மிகத் தவறான பழக்கம்!" "காய்ச்சிய பாலை 2-3 நிமிடங்களுக்கு மேல் நீண்டநேரம் சுட வைக்கும்போது, அதில் இருக்கும் விற்றமின் பி காம்ப்ளக்ஸ் சத்துக்களான பி1, பி2, பி12 ஆகியவை ஆவியாகிவிடும். கல்சியம், விற்றமின் சத்துக்களுக்காகத்தான் பால் குடிக்கிறோம். ஆனால், பாலை அடிக்கடி சுட வைப்பதால் அந்த சத்துக்கள் வீணாகிவிடும் என்றால், பால் குடிப்பதன் காரணமும் வீணாகிவிடும் தானே?!"

"பசும் பாலில் இருக்கும் தீங்கு தரும் பக்றீரியா, வைரஸ் போன்ற நுண்கிருமிகள், அதைக் காய்ச்சும்போது அழிந்துவிடும். அதனால்தான் பாலைக் காய்ச்சுகிறோம். இன்று பெரும்பாலானவர்கள் பாக்கெட் பால் வாங்குகிறோம். அது ஏற்கெனவே சுத்தம் செய்யப்பட்ட பிறகுதான் பாக்கெட்டுகளில் அடைக்கப்படுகிறது என்பதால், அதனை நீண்டநேரம் காய்ச்ச வேண்டும் என்கிற அவசியமில்லை. பாலைக் காய்ச்சியதும் குடித்துவிடலாம். ஆறவிட்டு, மீண்டும் சூடாக்கி சூடாக்கி சத்துக்களை அழித்த பாலைக் குடிப்பதைத் தவிர்க்கலாம்" என்றவர், பால் காய்ச்சும் முறையைக் கூறினார்.

"பால் பொங்கியதும் உடனே இறக்கிவிடாமல், 8-10 நிமிடங்கள் காய்ச்ச வேண்டும். கரண்டியால் பாலைக் கிளறிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் பால் 100 டிகிரி செல்சியஸ் வரை சூடாகி, தீங்கு தரும் பக்றீரியாக்கள் அழியும்.



# அடுக்களைப் பக்கம்

* காய்ந்துபோன ரொட்டித் துண்டுகளை இட்லிப் பாத்திரத்தில் வைத்து மூடி ஆவியில் வேகவைத்து எடுத்தால் மென்மையாக இருக்கும்.

* தேங்காய் சட்னிக்கு அதற்குரிய பொருட்களுடன் மல்லித் தூளையும் சேர்த்து அரைத்தால் சுவை கூடுதலாக இருக்கும்.

* சமையலுக்கு சின்ன வெங்காயம் பயன்படுத்துவதற்கு முன்பு, அதன்மேல் சிறிது எண்ணெய் தடவி வெயிலில் எடுத்து வைக்கவும். பிறகு தோலை சுலபமாக உரிக்க வரும். சமையலும் எளிதாக முடியும்.

* பாத்திரம் தேய்க்கும் ஸ்கிரப்பரை தினமும் நன்கு கொதித்த சுடுதண்ணீரில் கழுவி வெயிலில் காய வைத்து பிறகு உபயோகிக்கவும். வீட்டில் அதிகமான கிருமிகள் தங்கும் இடங்களில் இதுவும் ஒன்று.

* ரவா கேசரி தயாரிக்கும்போது அதில் அப்பிள், அன்னாசி, திராட்சை, மாம்பழத் துண்டுகளை, இறக்கும் முன் கலந்து கிளறவும். வித்தியாசமான பழக்கேசரி தயார்.

* நறுக்கிய அப்பிள் பழங்கள் வாடாமல் இருக்க சிறிது எலுமிச்சை அல்லது ஆரஞ்சு சாறு கலந்து வைக்கலாம்.

* ஏலக்காயை பொடித்து போட்ட பிறகு அதன் தோலை தூக்கி எறிந்து விடாதீர்கள். அப்படியே குடிக்கும் நீரில் போட்டால் போதும். மணமும், ருசியும் சேர்ந்த நீரைப் பருகலாம்



## மரவள்ளிக் கிழங்கு காரப் புட்டு





சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை:





மரவள்ளிக்கிழங்கு – அரை கிலோ
தேங்காய் – அரை மூடி (துருவவும்)
கடலைப்பருப்பு – 2 கரண்டி
வேர்க்கடலை – 50 கிராம்
காய்ந்த மிளகாய் – 6
மல்லி – ஒரு கரண்டி
எள் – ஒரு கரண்டி
வெங்காயம் – 100 கிராம்
கறிவேப்பிலை – ஒரு ஆர்க்கு
எண்ணெய் – 4 கரண்டி
உப்பு – தேவைக்கேற்ப
கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப் பருப்பு – தலா ஒரு கரண்டி (தாளிக்க)

### செய்முறை

கடலைப்பருப்பு, வேர்க்கடலை, காய்ந்த மிளகாய், மல்லி, எள் ஆகியவற்றை வறுத்து கொரகொரப்பாகப் பொடித்துக்கொள்ளவும். மரவள்ளிக்கிழங்கை வேக வைத்து, தோலுரித்து உதிர்த்துக்கொள்ளவும். வாணலியில் எண்ணெய்விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, கறிவேப்பிலை தாளித்து, வெங்காயம் சேர்த்து வதக்கவும்.

பின்பு அதில் உதிர்த்து எடுத்த மரவள்ளிக்கிழங்கு, துருவிய தேங்காய், வறுத்துப் பொடித்த பொடி, உப்பு சேர்த்து நன்கு புரட்டவும். மரவள்ளிக்கிழங்கு புட்டு தயார். சாதத்தில் பிசைந்து சாப்பிட சுவையாக இருக்கும்.

**அமேசானை பிறப்பிடமாகக் கொண்ட மரவள்ளிக் கிழங்கு 17ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தது. முதன்முதலில் போர்த்துக்கீசியர்களால் கேரளாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கு இடமில்லை;

## பாட்டி – தாய் – சித்தி – அக்கா – தங்கை

# உறவுகள் பேசும் யானைகள்



# பற்றித் தெரியுமா?

“நீரோடையில் ஒரு யானைக் குடும்பம் நீர் அருந்திக் கொண்டிருந்தது. யானைகளை, “யானைக்கூட்டம்” என்று சொல்லக் கூடாது. “யானைக்குடும்பம்” என்பது தான் சரியான வார்த்தை. நீர் அருந்தி விட்டு மேலேறும்போது அந்தக் குடும்பத்திலிருந்த மூத்த தாய் யானை அப்படியே சரிந்து விழுந்து இறந்தது. உறவின் அடிப்படையில் பார்த்தால், மூத்த தாய் யானை என்பது ஒரு யானை குடும்பத்தின் பாட்டி என்றும் சொல்லலாம். மற்ற யானைகளுக்கு தங்கள் குடும்பத்தின் மூத்த உறுப்பினர் இறந்துவிட்டார் என்பது தெரிந்து விட்டது.

தங்களுடைய தாயைச் சுற்றிச் சுற்றிவர ஆரம்பித்தன. காட்டுக்குள் யானையொன்று இறந்துகிடப்பதை அறிந்து, வனத்துறையினரும் மருத்துவரும் வந்து உடற்கூறாய்வு செய்யும் நேரத்தில் மற்ற யானைகள் அனைத்தும் ஆங்காங்கே மரங்களின் பின்னால் நின்றுகொண்டிருந்தன. அந்த நேரத்தில் எந்த யானையும் எதையும் மேயவில்லை. அதாவது உணவு எடுத்துக்கொள்ளவில்லை. எல்லாம் முடிந்து அந்தப் பாட்டி யானையைப் புதைத்த நேரத்தில் மொத்த யானைக் குடும்பமும் ஒரே நேரத்தில் பிளிறியது.

அந்த பிளிறல் ஒப்பாரி வைப்பதைப்போலவே இருந்தது. பாட்டி யானை மண்ணுக்குள் சென்றதும் அந்த யானைக்குடும்பம் அந்த நீரோடையில முங்கிக் குளித்து விட்டு அந்த இடத்தை விட்டுக் கடந்து சென்றன. கிட்டத்தட்ட, நம் குடும்பத்தில் ஒருவர் மரணமடைந்தால் எப்படி நாம் குளிப்போமோ அதைப் போலவே இருந்தது அந்த யானைக் குடும்பத்தின் செயல்!”, “ஆதியில் யானைகள் இருந்தன” புத்தகத்தின் ஆசிரியருமான கோவை சதாசிவம், ஒரு யானைக்குடும்பத்தின் மூத்த பாட்டி இறந்ததையும், அதன் இறப்பையொட்டி அதன் குடும்ப உறுப்பினர்கள் எப்படி துக்கம் கடைபிடித்தன என்பதையும்தான் பார்க்க நேரிட்டதை இப்படி விவரிக்கிறார்.

“உறவுகளைப் பேணுவதில், மனிதர்களுக்கே பாடம் எடுப்பவை யானைகள். யானைகள் தாய் வழிச் சமூகத்தைப் பின்பற்றுபவை. யானைக் குடும்பத்துக்குத் தலைவி தான். தலைவன் கிடையாது.

குடும்பத்தில் மூத்த பாட்டி யானை தான் அந்தத் தலைவி. அதுதான், உணவு தேடியும் நீர்நிலைகளைத் தேடியும் தன் குடும்பத்தை வழி நடத்தும். வெயில் காலத்திலும் எந்த நீர் நிலைகளில் நீர் இருக்கும் என்பது இந்தப் பாட்டி யானைக்குத்தான் தெரியும். யானைக் குடும்பங்களை உற்று கவனித்தால், அதில் ஆண் யானைக் கன்றுகள், அதாவது குட்டி ஆண் யானைகள் இருக்கும். ஆனால், வளர்ந்த ஆண் யானைகள் இருக்காது.

அவை இனப்பெருக்க காலத்துக்கு வந்தவுடனே, அவற்றை குடும்பத்தை விட்டு வெளியேற்றி விடும் மூத்த பெண் யானை. தன் குடும்பத்தில் இருக்கிற சகோதர முறைகொண்ட பெண் யானைகளுடன் அவை உறவு கொண்டு விடக்கூடாது என்பதற்காகவே இப்படியொரு முடிவை எடுக்கும் மூத்த யானை.

இன்னமும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், இனப்பெருக்க பருவத்தில் இருக்கிற ஆணும், பெண்ணும் அருகருகே உரசியபடி நடந்து வருவதைக்கூட மூத்த யானை அனுமதிக்காது. அதே நேரம், ஆண் யானையைக் குடும்பத்தை விட்டு வெளியேற்றுகிறது என்பதற்கு அர்த்தம், அந்த ஆண் யானை தன் குடும்பத்தை விட்டு மொத்தமாக சென்றுவிடும் என்பதல்ல. குடும்பத்தை விட்டு சற்று தூரத்தில் இருக்கும், அவ்வளவுதான். இனப்பெருக்கக் காலத்தில், தனித்திருக்கும் இந்த ஆண் யானையுடன் வேறொரு குடும்பத்தைச் சேர்ந்த பெண் யானை சேரும்.

இந்தளவுக்கு பாட்டி யானை கட்டுப்பாடாக இருப்பதற்கு சகோதர உறவுக்குள் இனப்பெருக்கம் நிகழ்ந்து விடக்கூடாது என்பது மட்டுமே காரணமல்ல. ஒரே குடும்பத்துக்குள் இனவிருத்தி செய்தால், அடுத்த தலைமுறை யானைக்கன்றுகள் ஆரோக்கியமாக இருக்காது என்பதும்தான். தங்களுடைய மரபணுக்களை வீரியமாக வைத்துக்கொள்வதற்காக, வேறொரு யானைக்குடும்பத்தில் இருந்துதான் ஆண் யானையைத் தேர்ந்தெடுக்கும் பெண் யானைகள். கருத்தரித்து யானைக்கன்றை ஈனும்போது, குடும்பத்தில் இருக்கிற அத்தனை பெண் யானைகளும் பிரசவத்துக்கு உதவி செய்யும். பிரசவ வேதனையுடன் இருக்கும் பெண் யானையின் வயிற்றை மற்ற பெண் யானைகள் தடவிக்கொடுக்கும். குடும்பத்தில் இருக்கிற சித்தி, அக்கா உறவுமுறை கொண்ட யானைகள் வயிற்றைத் தடவிக்கொடுத்து, தும்பிக்கையுடன் தும்பிக்கை இணைத்து என பிரசவ வேதனையில் இருக்கிற யானையை ஆறுதல்படுத்தும்.

குட்டி ஈன்றதும், பெண் யானை ஒருநாளைக்கு 12 லீற்றர் வரைக்கும் தாய்ப்பால் சுரக்கும். ஆறு மாதம் வரைக்கும் யானைக்கன்று தாய்ப்பால் மட்டுமே குடிக்கும். அதன் பிறகுதான் செரிமானம் செய்ய உதவும் நொதிக்கான உறுப்புகள் வளர ஆரம்பிக்கும்.

ஆறு மாதங்களுக்குப் பிறகும் யானைக்கன்றுகள் புல் மேய ஆரம்பிக்காது. பதிலாக, பாட்டி, அம்மா, அத்தை, சித்தி யானைகள் போடுகிற சாணத்தை சாப்பிட ஆரம்பிக்கும். யானைகளின் வயிற்றில் ஐம்பது சதவிகிதம் மட்டுமே செரிமானம் நிகழும். அதன் சாணத்தைச் சாப்பிடும்போது குட்டி யானைகளுக்கு உணவும் கிடைத்துவிடும். செரிமானத்துக்கான நொதியமும் கிடைத்து விடும்.

இதன்பிறகுதான் அந்தக் குட்டிகள் புல், இலை, தழை, பழம், காய்ந்த குச்சிகள், மரப்பட்டை, மூங்கில் என மேயத் தொடங்கும். கல்சியம் சத்துக்காக கொஞ்சம் மண்ணும் சாப்பிடும். இப்படி சரியான உணவுப்பழக்கத்துக்கு வருவதற்கு குட்டி யானைக்கு எட்டு மாதம் பிடிக்கும்.

பாட்டி யானை இறப்பதற்கு முன்னால், தன் குடும்பம் வலசை செல்ல வேண்டிய பாதைகள், அந்தக் காட்டில் எங்கெங்கு நீரோடைகள் இருக்கும், எந்த நீரோடையில் கோடையிலும் நீர் இருக்கும், காட்டுக்குள் எங்கே என்னென்ன உணவுக் கிடைக்கும், எந்தெந்த காலத்தில் காட்டின் எந்தப் பகுதியில் இருக்க வேண்டும் என்பது வரை தன்னுடைய மூத்த மகளுக்குக் கற்றுக்கொடுத்து விடும்.

# தெளிவே என் சிந்தனையுள்... 36

மனித மனம் எப்படிப்பட்டது என்பதற்கு ஒரு சிறிய உதாரணம்.

கோடி பணம் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று ஒரு கோயில் பூசாரியிடம் கேட்டபோது அதற்கு அவர் சொன்ன பதில்.

தங்கத்தில் கோவில் கட்டி தங்கத்தில் தேர் கட்டி அதில் தங்கத்திலான சுவாமியை வீதியுலா செய்விப்பேன் என்றார்.

இதே கேள்வியை ஒரு பிச்சைக்காரனிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில்.

நான் பிச்சை எடுக்கும் இந்தத் தட்டை எறிந்துவிட்டு தங்கத்தில் தட்டுச் செய்வேன். அந்தக் கோவில் திண்ணையில் தலையணையின்றியே படுப்பேன்.

ஆதலால் தங்கத்தில் ஒரு தலையணை செய்து அதில் படுத்துறங்குவேன் என்றார்.

இதே கேள்வியை ஒரு கொடைவள்ளலிடம் கேட்டபோது.

வாழ வழியின்றி எத்தனையோ பேர் கஷ்ரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கோடி ரூபாய்களையும் அவர்களுக்கே பகிர்ந்தளித்து விடுவேன் என்றார்.

**அன்பானவர்களே!**

மனிதர்களாகிய எம்மிடம் இருக்கும் பண்பு இதுவே.

நாம் எதுவாக இருக்கின்றோமோ அது தொடர்பிலேயே எமது சிந்தனைகள் உதிரும்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : இதய கமலம்
பாடல்: உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
குரல்: சுசீலா
வரிகள்: கண்ணதாசன்



உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல

உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல

இங்கு நீயொரு பாதி நானொரு பாதி
இதில் யார் பிரிந்தாலும் வேதனை பாதி
காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்
காதலின் முன்னே நீயும் நானும் வேறல்ல

உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல

ஒரு தெய்வமில்லாமல் கோவிலுமில்லை
ஒரு கோவிலில்லாமல் தீபமுமில்லை
நீ அந்தக் கோவில் நான் அங்கு தீபம்
தெய்வத்தின் முன்னே நீயும் நானும் வேறல்ல

உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல

என் மேனியில் உன்னைப் பிள்ளையைப் போலே – நான்
வாரியணைத்தேன் ஆசையினாலே
நீ தருவாயோ நான் தருவேனோ
யார் தந்த போதும் நீயும் நானும் வேறல்ல

# நடைமுறை வாழ்க்கையில் கல்வியின் பங்களிப்பு!

கல்வி என்பது வெறும் ஏட்டு அறிவைத் திணிப்பதோ அல்லது மனப்பாடம் செய்து பரீட்சை எழுதுவதோ அல்ல. எதிர்கால சவால்களை எதிர்கொள்ளவும், நடைமுறை வாழ்வில் திறம்படச் செயற்படவும் மாணவர்களைத் தயார்படுத்துவதே அதன் அடிப்படை நோக்கம்.

ஆனால், தற்போது நம் கல்வி முறையில், பரீட்சையைப்படுத்தப்பட்ட (Exam-oriented) அணுகுமுறை ஆதிக்கம் செலுத்துவதால், உண்மையான கற்றல் புறக்கணிக்கப்படுகிறது என்ற விமர்சனம் வலுவாக எழுந்துள்ளது.

திறமையான கல்விக்குத் தடையாகிய மனப்பாடக் கல்வி முறையில் உள்ள குறைபாடுகளை நாம் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம். மாணவர்களின் ஆரம்பக் கட்டப் படிப்பிலிருந்தே ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் கற்பிக்கப்பட்டு, அவர்களை ஒரே திசையில் பயணிக்க வைக்கிறோம். இதன் விளைவாக, மாணவர்கள் அறிவை பெறுவதற்குப் பதிலாக, பரீட்சைக்காகப் பாடப்பரப்புக்களை மனப்பாடம் செய்பவர்களாகவே உள்ளனர். இது, அவர்கள் மத்தியில் திறன், ஆக்கபூர்வமான சிந்தனை மற்றும் சுயசிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. இதனால் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்குத் தேவையான நடைமுறைப் பயிற்சியும் தொழில்சார் அனுபவமும் இங்கு அரிதாகவே கிடைக்கின்றன.

கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களின் வெற்றிக்கு, அனுபவமும் நடைமுறை அறிவும் இன்றியமையாதவை. ஆனால், நமது கல்வி முறை, புத்தக அறிவுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து, பல நேரங்களில் நடைமுறை வாழ்க்கையுடன் தேவையான விடயங்களைக் கற்றுக் கொடுக்கத் தவறிவிடுகின்றன. இதனால், பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் கூட, தொழில் உலகில் நுழையும் போது போதிய அனுபவமோ, தன்னம்பிக்கையோ இன்றிக் காணப்படுகிறார்கள்.



இந்த நிலையை மாற்றியமைக்க, மாற்றத்தை நோக்கி ஒரு நகர்வு காலத்தின் கட்டாயமாகின்றது. இதற்குத் திறன் அடிப்படையிலான கல்விச் சீர்திருத்தங்கள் (Skill-based Education Reforms) அவசியம்.

ஆரம்பப் பள்ளியிலிருந்தே மாணவர்களுக்குச் சிந்தனையைத் தூண்டும் கேள்விகளைக் கேட்கப் பழக்க வேண்டும். மேலும், கற்றல் கற்பித்தல் முறைகளில் ஆக்கபூர்வமான பயிற்சிகளையும், களப்பயணங்களையும் (Field Visits) இணைக்க வேண்டும். உயர்கல்வியில், வெறும் தத்துவார்த்த வகுப்புகளுக்குப் பதிலாக, தொழில்துறை சார்ந்த நடைமுறைப் பயிற்சி மற்றும் பணி அனுபவம் போன்றவற்றை முக்கியப் பாடப்பரப்பாக மாற்ற வேண்டும்.

கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் , மாணவர்கள் நிஜ வாழ்க்கைத் திட்டங்களில் நேரடியாகப் பங்கேற்க வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இந்த மாற்றம், பரீட்சைப் புள்ளிகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மையான திறமையைக் கண்டறிய உதவும்.

ஒரு தேசத்தின் முன்னேற்றம் அதன் இளைஞர்களின் திறன் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. ஏட்டுக் கல்வியையும், நடைமுறை அறிவையும் சமநிலையில் கொண்டுவரும்போதே, நம் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுபவர்களாக மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாகவும் மாறுவார்கள்.

**ஜிந்துஜா விஜயகுமார்**

# இந்த பையின் விலை இருபதாயிரமா?



அப்பிள் நிறுவனம் அதன் ஐபோன்களை எடுத்துச் செல்வதற்காக புதிய பையை அறிமுகப்படுத்தி இணையத்தில் கடும் எதிர்வினைகளையும் கேலிகளையும் சந்தித்து வருகிறது.

உங்கள் மொபைல் சாதனத்தை பாக்கெட் இல்லாத உடையணிந்திருக்கும்போது எடுத்துச்செல்ல இது ஒரு புதுமையான வழியாக இருந்தாலும், இதற்கு இந்திய மதிப்பில் 13,300 ரூபாய் முதல் 20,388 ரூபாய் வரை விலை வைத்திருப்பது கேலிகளுக்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இதேபோல சில மாதங்களுக்கு முன்பு ஆப்பிளில் ரூ.2000 மதிக்கத்தக்க விலையில் லேப்டாப் மற்றும் பிற கருவிகளைத் துடைக்கும் துணி விற்கப்பட்டபோது இதேபோன்ற எதிர் வினைகள் எழுந்தன. அப்போது அந்த துணியைக் கூட வாங்கிய ஆப்பிளின் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு இது தர்ம சங்கடமான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தப் பை லிமிட்ட் எடிஷனாக விற்கப்படும் என ஆப்பிள் வெளியிட்ட செய்திஅறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆப்பிள் இணை நிறுவனரான ஸ்டீவ் ஜாப்ஸ் அணியும் கருப்பு ஆமை கழுத்து டி-சர்ட்டை வடிவமைத்த இஸ்ஸி மியாகே என்ற ஆடை வடிவமைப்பாளருடன் இணைந்து இந்தப் பையை வடிவமைத்துள்ளனர்.

இதில் நீளமான கைப்பட்டை மற்றும் குட்டையான கைப்பட்டை என இரண்டு வகைகள் உள்ளது. குட்டையான கைப்பட்டை பளீச்சிடும் 8 வண்ணங்களிலும் மற்றொன்று 3 வண்ணங்களிலும் கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆப்பிள் எப்போதும் டெக்னாலஜியில் உச்சம் . ஆனால் ஃபேஷன் அதற்கு கைவரவில்லை. எனவே நிறுவனத்தை வேறுதிசைக்குத் திருப்பாமல், டெக்னாலஜியில் புதுமைகளைக் கொடுக்க வேண்டும் என்பதே ஆப்பிளர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொல்லவே இல்ல...

# சி னி மா

## ரம்யா





**வியாழக்கிழமை** ஆனால், சாய் பாபாவை வணங்க மறப்ப தில்லை வி.ஜே. ரம்யா. "தீவிரமாக அவரை ஃபாலோ செய்து கொண்டு வருகிறேன்" என்கிறவர், சென்னையிலுள்ள சில சாய் பாபா ஆலயங்களுக்கு செல்வதை வழக்கமாக்கியிருக்கிறார்.



**எவ்வளவு** வேலை இருந்தாலும்கூட, மாதத்திற்கு ஒரு முறையாவது இயக்குநர்கள் மற்றும் நடிகர்களான அமீர், தனுஷ் ஆகியோருடன் வெற்றிமாறனின் சந்திப்பு நடக்கிறது. இதில், புதிதாக இணைந்திருக்கிறார், இயக்குநர் மற்றும் நடிகர் மிஷ்கின். பொதுவாக, சினிமாவைப் பற்றி மட்டும் பேசிவிட்டுக் கலைந்து விடுவார்களாம்.



**திரைப்பட** இசையமைப்பாளர் ஆகி விட்டாலும், தன்னுடைய ஆரம்பமான ஆல்பம் உருவாக்குவதிலும் ஒரு கண் வைத்தபடியே இருக்கிறார் சாய் அபயங்கர். மமிதா பைஜூவை வைத்து ஒரு பாடல் எழுதி, ஆடிப்பாட ரெடியாகிவருகிறார். கால்ஷீட் தருவதாக மமிதா சொல்லிவிட, தன் பிஸியான இசையமைப்பாளர் பணிகளுக்கு நடுவிலும் ஆல்ப் பாடலைப் படமாக்க நேரம் பார்த்துக்கொண்டிருக்கிறார்.



**தமிழில்** நிலைத்து நின்றுவிட வேண்டுமென தீவிர முயற்சியில் இருக்கிறார் கீர்த்தி ஷெட்டி. பிரதீப் ரங்கநாதனுடன் நடித்த "லவ் இன்சூரன்ஸ் கம்பெனி", "வா வாத்தியார்" படங்கள் ரிலீஸ் ஆகாமல் அவரது பயணத்தைத் தாமதப்படுத்தியிருப்பதில் வருத்தத்தில் இருந்தவர், கிறிஸ்மஸ் விடுமுறைக்கு விக்னேஷ் சிவன் படம் வெளிவரவிருப்பதால் ஆசுவாசமாகியிருக்கிறார். தமிழில் மமிதாவின் புகழ் உச்சத்தில் இருப்பதால் அந்த இடத்தைப் பிடிக்க சம்பளத்தை பெரிதாகக் குறைக்கவும் முன்வருவதாகக் கேள்வி.



**சிலம்பரசன்** நடித்த "மாநாடு" வெற்றியைத் தொடர்ந்து, "மாநாடு 2" படம் வருவதாகப் பேசப்பட்டது. இதற்கான கதையை அவ்வப்போது சிம்புவும் வெங்கட் பிரபுவும் சந்தித்து விவாதிக்கிறார்கள். இப்படி அவ்வப்போது விவாதித்ததிலேயே இரண்டாம் பாகத்தின் திரைக்கதை கிட்டத்தட்ட ரெடியாகிவிட்டதாம். சிவகார்த்திகேயனை வைத்து வெங்கட் பிரபு இயக்கும் படம் முடிந்த பிறகு, "மாநாடு 2" படம் தயாராகலாம் என்கிறார்கள்.



**சூர்யாவின்** மிகப் பெரிய ரசிகை சமந்தா. ஸ்டெல்லா மேரீஸில் படிக்கும்போதே விழாவிற்கு வந்த சூர்யாவிடம் ஆட்டோகிராப் வாங்கியவர். அஞ்சானில் நடிக்கும்போது இதை அவரிடமே சொல்லி, ஆட்டோகிராபைக் காட்டிப் பரவசப்பட்டார் சாம். இப்போது கல்லூரியில் படிக்கும் போதே சூர்யாவின் ரசிகையாக இருந்த மமிதா பைஜூ "சூர்யா 46" படத்தில் அவரோடு நடிக்க வாய்ப்பைப் பெற்றிருப்பதில் குதூகலத்தில் இருக்கிறார்.



**கதாபாத்திரங்களுக்காக** மாதவன் காட்டும் ஆர்வம் புருவம் உயர்த்த வைத்திருக்கிறது.

ஜி.டி.நாயுடுவின் பயோபிக் படத்திற்காக அவரின் தோற்றத்திற்கு மாறியுள்ளார்.

தினமும் இரண்டு மணி நேரம் மேக்கப் போட்டு ஷாட்டுக்கு வருகிறார் என்கிறார்கள்.

# மினி டைரி...

## தியா





**பள்ளி நாட்கள்**

கோத்தகிரி. அந்தச் சின்ன வயது நினைவுகள் இப்போதும் மனதில் இருக்கிறது. இன்றைக்கும் எனக்குப் பிடித்த இடம். கோயம்புத்தூரில் இருந்தாலும் நேரம் கிடைத்தால் காரை எடுத்துக்கொண்டு குடும்பத்துடன் கிளம்பி விடுவேன். இரண்டு நாள் அங்கே இருந்துவிட்டு வந்தால் அவ்வளவு எனர்ஜி கிடைத்த மாதிரி இருக்கும்.

**ஆங்கரிங்**

விளையாட்டாகத் தொடங்கியது. அப்போது பத்தாவதுகூட முடிக்கவில்லை. லோக்கல் சேனலில் ஆரம்பித்த பயணம். இப்போது நம்பர் ஒன் சேனலில் இருக்கிறேன் என்று நினைக்கும் போது இயற்கைக்கும் கடவுளுக்கும் நன்றி.

**மறக்க முடியாத இன்டர்வியூ**

தனுஷ் சாரை எடுத்தது. ஏனென்றால் அது என்னுடைய முதல் செலிபிரிட்டி இன்டர்வியூ. அவரிடமே அதைச் சொன்னேன். "ஹேப்பி" என்று சொன்னார்.

**பயணம்**

ரொம்பப் பிடித்த விடயம். இருபது நாடுகள் வரை போய் வந்திருக்கிறேன். இன்னும் இந்தப் பட்டியல் தொடரும்.

**கிரிக்கெட்**

மற்ற எல்லோரையும்விட எக்ஸ்ட்ராவாகவே பிடிக்கும். வீட்டுக்காரர் கிரிக்கெட் ஆடுகின்றவராக இருந்தால் அப்படித்தானே இருக்க வேண்டும்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## கணவனைத் திருத்திட...



இரண்டு பெண்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். என் கணவர் தினமும் இரவு லேட்டாகத்தான் வீட்டுக்கு வருகிறார். என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று சொன்னாள் முதல் பெண்.

அதற்கு இரண்டாவது பெண் என் கணவர் கூட லேட்டாகத்தான் வந்து கொண்டிருந்தார். இப்போதெல்லாம் ஆபீஸ் ஐந்து மணிக்கு விட்டால், டாண் என்று ஐந்தரை மணிக்கு வீட்டில் இருக்கிறார் என்றாள்.

முதல் பெண்ணுக்கு செம ஆச்சரியம் அப்படி என்னதான் செய்தாய்? என்று கேட்டாள்.

ஒருநாள் வழக்கம்போல அவர் லேட்டாகத் தான் வந்தார். நான் தூக்கக் கலக்கத்திலே வேண்டும் என்றே, யார் முரளியா? என்று கேட்டேன். அவ்வளவுதான் என்னுடைய ட்ரீட்மெண்ட் என்று சொன்னாள் இரண்டாவது பெண். முதல் பெண் புரியவில்லையே இதில் அப்படி என்ன இருக்கு? என்று கேட்டதற்கு, இரண்டாவது பெண் சொன்னாள், வேறொன்றுமில்லை. என் கணவருடைய பெயர் முரளி இல்லை. கார்த்திக்

## டிரைவர்



ஒருநாள் கார் டிரைவர் தன் வண்டியை எடுத்து கொண்டு வேலைக்கு கிளம்பினார். சிறிது தூரம் சென்றதும் அவர் கார் டயர் பஞ்சர் ஆகிவிட்டது. அவர் வண்டி பஞ்சர் ஆன இடம் ஒரு மனநல மருத்துவமனை. அருகில் சுற்றும் முற்றும் ஏதாவது மெக்கானிக் கடை இருக்கிறதா? என்று பார்த்தார்.

எதுவும் இல்லாததால் அவரே கழட்டி ஸ்டெப்னி மாத்தலாம் என்று முடிவெடுத்து போல்ட்டை, கழட்ட ஆரம்பித்தார்.

4 போல்ட்டையும் கழட்டி வைத்துவிட்டு ஸ்டெப்னி எடுத்து வர சென்றார். ஸ்டெப்னி எடுத்து வரும்போது அவர் கால் இடறி 4 போல்ட்டில் பட்டதால் அருகில் இருந்த கால்வாயில் விழுந்து விட்டது. எப்படி எடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டு இருந்தார்.

அப்போது ஏதாவது பிரச்சினையா டிரைவர் என்று ஒருவர் கேட்டார்.

அவரைப் பார்த்த டிரைவர், மனநல மருத்துவமனையின் நோயாளி இவர், எப்படியாவது இவரை சாக்கடையில் இறக்கி போல்ட்டை எடுத்துவிட வேண்டும் என்று முடிவெடுத்து நடந்த கதையை அவரிடம் கூறினார்.

உடனே அந்த நபர் மற்ற மூன்று சக்கரங்களில் இருந்து தலா ஒரு போல்ட்டைக் கழட்டி இந்த சக்கரத்தில் மாட்டி, அருகில் உள்ள மெக்கானிக்கடையில் ,4 போல்ட்டுகள் வாங்கி, எல்லா சக்கரத்திலும் மாட்டிக் கொள் என்று சொன்னார்.

இவ்வளவு தெளிவாக இருக்கிறீர்கள். நீங்கள் எப்படி இந்த மருத்துவமனையில் என்று கேட்டார்.

இந்த மருத்துவமனையில் இருக்கின்ற எல்லோரும் முட்டாளும் இல்லை. வெளியில் சுற்றுகின்ற எல்லோரும் புத்திசாலியும் இல்லை என்றார்.

எப்போதுமே ஒருவன் தோற்றத்தை வைத்து எதையும் முடிவு செய்யாதீர்கள்...!

## அவரவர் பார்வை...!



மத்தியான வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. மரத்தடியில் ஒருவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான்.

அந்த வழியாக வந்த விறகுவெட்டி அவனைப் பார்த்தான்.

கடுமையான உழைப்பாளியாக இருக்க வேண்டும். உழைத்த களைப்பால்தான் இந்த வெயிலிலும் இப்படி உறங்குகிறான் என நினைத்துக்கொண்டே சென்றான்.

அடுத்ததாக திருடன் ஒருவன் அந்த வழியாக வந்தான் இரவு முழுவதும் கண்விழித்து திருடி இருப்பான் போல தெரிகிறது. அதனால்தான் இந்த சுட்டெரிக்கும் வெயிலிலும் அடித்துப் போட்டது போல் தூங்குகிறான் என நினைத்துக்கொண்டே சென்றான்.

மூன்றாவதாக குடிகாரன் ஒருவன் அந்த வழியாக வந்தான். காலையிலேயே நன்றாகக் குடித்து விட்டான் போல இருக்கிறது. அதனால்தான் குடிமயக்கத்தில் இப்படி விழுந்து கிடக்கிறான் என நினைத்துக் கொண்டே சென்றான். சிறிது நேரத்தில் துறவி ஒருவர் வந்தார். இந்த நண்பகலில் இப்படி உறங்கும் இவர் முற்றும் துறந்த ஞானியாகத்தான் இருக்க வேண்டும். வேறு யாரால் இத்தகைய செயலை செய்யமுடியும் என அவரை வணங்கி விட்டுச் சென்றார்.

"நாம் எப்படியோ நம் எண்ணங்களும் அப்படியே"

# கவிதைக் கலசம்


அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
அரசியல் / இலக்கியம் / கவிதை / கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


## மாலைச் சூரியன்



மாலைச் சூரியன்
மங்கி மறைகிறான்
கை காட்டிக் கொண்டு
செவ்வானமாக - ஏன்?
நாளை விடிய உதிப்பதற்கு
கமக்காரருக்கு உதவுவதற்கு - இங்கு
மறையும் நேரம்
இன்னொரு நாட்டில் உதிக்கிறான்
வாழ்க மாலைச்சூரியன்
வளர்க கமக்கார(ன்)ர்!!

**ஆக்கம்**
**சிவரூபன் ஜெயருக்ஷன்,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.**

## உழைத்து வாழ வேண்டும்



உலகில் உயர்வாய் நிலைத்துவாழ
உடலை வருத்தி உழைத்து வாழ வேண்டும்
நிலத்தை உழுது பயிரிட்டு உணவுப்
பலத்தை உயர்த்தி வாழ வேண்டும்

பிச்சை எடுக்கும் சோம்பேறி மனத்தை
பிச்சு எறிந்து விரட்டல் வேண்டும்
வித்தை சொல்லும் விஞ்ஞானி உழைப்பை
நித்தம் நினைவில் நிறுத்துதல் வேண்டும்

கொடுத்து வாழ்தல் தலைமுறையில்
கொடியேற்றிய இனத்தில் வந்தவர்
உழைத்து வாழா வழி செல்கையில்
உணர்த்தி அறிவூட்டுதல் வேண்டும்
பொய் களவு பயிற்சி பெற்றவராய் - பிறரிடம்
பறித்து வாழ்ந்திடல் வேண்டாம்.
உயிர் வாழும் உரிமை வேண்டுமெனில்
உயர் நெறியில் உழைத்து வாழ வேண்டும்.



**சாந்தையூர் வீ.விினில், பண்டத்தரிப்பு**

## நீரின்றி அமையாது



நீர் இன்றி அமையாது உலகு - இதை
நீ தினம் தினம் உணர்ந்திட வேண்டும்.
நீரின் தேவை என்றும் தேவை
வாழும் உயிரின் அடிப்படை தேவை

பணத்தை மட்டும் சேமிக்கும் மனிதா
நீரையும் கொஞ்சம் சேமித்து வை
பணத்தில் கிடைக்கும் நீர் - அது
நிலத்தில் கிடைக்கும் நீருக்கு ஒப்பாகா?

வானம் தரும் நீரை - கடலுக்கு
தானம் செய்ய முயலாதே
மானம் காக்கும் தமிழினம் - மண்ணில்
நீரை சேமிக்க முயல வேண்டும்



புதிய மனையை அமைக்கும் மானிடனே - அங்கு
மழைநீர் தேக்க தாங்கியொன்று கட்டுவாயா
மரத்துப்போன மனித குலமே - தேவையற்ற
பூந்தொட்டி கட்டி மகிழ்வாயா?

குடிக்கும் நீரில் ஒவ்வொரு துளியும்
மதித்திட வேண்டும் ஒவ்வொரு நொடியும்
நாளைக்கு நமக்கு சேர்க்கும் சொத்தாய்
மழை நீரை நாமே சேமிக்க வேண்டும்.

**அராலியூர் - ப.தர்மகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ். கோட்டை

77

**செங்கை ஆழியான்**

2000 இராணுவ வீரர்கள் பரவைக்கடலைக் கடக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். 30 விசைப்படகுகள் ஆழமற்ற கடற்பரப்பில் பயன்படுத்துவதற்கென விசேஷமாகத் தயாரிக்கப்பட்டன. பயன்படுத்தப்பட்டன.

இவற்றில் ஏறிய இராணுவத்தினர் கோட்டையை நோக்கி வந்தனர். கோட்டையைச் சூழ்ந்திருந்த புலிகளின் காவலரண்கள் அனைத்தும் விமானக் குண்டு வீச்சுக்களால் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன என்ற நம்பிக்கையுடன் விரைந்து வந்தனர். முதல் வந்த ஆறு விசைப்படகுகள் புலிகளின் தாக்குதலிற்குள்ளாகிச் சிதறின.

பல படகுகளிலிருந்து இராணுவத்தினர் கடலிற்குள் குதித்து விட்டனர். சில படகுகள் வந்த வேகத்தில் திரும்பிச் சென்றன. இச்சந்தர்ப்பத்தில் பண்ணைச் சந்தியிலிருந்த புலிகளின் பலமான காவலரண் விமானத் தாக்குதலால் உடைக்கப் பட்டதை பயன்படுத்தி மூன்று விசைப்படகுகள் வரையில் அப்பகுதியில் கரையேறின.

ஏறிய வேகத்தில் அதிலிருந்து குதித்த ஸ்ரீ லங்கா இராணுவவீரர்கள் சிலர், பண்ணை வீதியை அடுத்து மேற்குப்புற அகழிக்கு வெளியில் அகழி மதிலோடு இருந்த தாழ்காவலரணில் (சின்னக்கோட்டையில்) புகுந்து கொண்டனர்.

புகுந்து தம்மை மறைத்துக்கொண்டு, சென்ரி நிலை எடுத்துக்கொண்டனர். சின்னக்கோட்டைக்குள் புகுந்தவர்கள் மறை வெடுத்திருந்ததால் புலிகளால் தாக்க முடியாது போனது.

யாழ் கோட்டையை அடைய எடுத்த முயற்சியில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீ லங்கா அரசு கூறியது. 106 பேர் படுகாயமடைந்ததாகவும் குறிப்பிட்டது.

இந்த எண்ணிக்கையை விட மிக அதிகமாகவே பலியாகியோர் தொகை இருக்க முடியும்.

யாழ்ப்பாணக் கோட்டையின் மேற்குப்பக்கமாக அகழியை அடுத்து அமைந்திருந்த சின்னக் கோட்டைக்குள் புகுந்து கொண்ட இராணுவத்தினர் அங்கிருந்து நிலையெடுத்து பண்ணைச்சந்தியிலிருந்த புலிகளின் காவலரணக்களைக் கைப்பற்ற முயன்றனர்.

பண்ணைச் சந்தியில் திறந்த வெளியில் போராளிகளின் பலமான அரண் ஒன்றிருந்தது தண்டவாளங்கள், மண்மூடைகள், ரயர்கள் கொண்டு அமைந்த பலமான அரணாக அது விளங்கியது இதனையும் தொலைத் தொடர்பு நிலையத்தையும் இணைக்கும் வகையில் எலி வளை போன்ற சுருங்கைகள் அமைந்திருந்தன.

தொடரும்...

# புது வாழ்வு

# கடற்புறா




168

"ஆம்."

"எப்படி?"

"மக்கள் சதா இரவிலும் போர்ப்பயிற்சி செய்கிறார்கள்."

"இந்தப் பெரும் பொய்யைக் கேட்டு மலைத்த பலவர்மன், "அப்படியேது மில்லையே. போர்ப்பயிற்சி, அணிவகுப்பு இவற்றைத்தான் நீங்களே நிறுத்திவிட்டீர்களே?" என்று கூறினான்.

"நான் நிறுத்தினால் யார் கேட்கிறார்கள்?"

"எல்லோரும்தான் கேட்கிறார்கள்."

"அப்படியானால் நேற்றிரவு பூராவும் டமார சத்தம் அடிக்கடி கேட்டதே?"

"காட்டுப் பகுதியிலிருந்து கேட்டிருக்கும்."

"காட்டுப் பகுதியில் டமாரமடிக்க யாரிருக்கிறார்கள்?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் மேலும் அசந்து போனான் பலவர்மன். தினம் மிதமீறிக் குடிப்பதால் உண்மையாகவே இளையபல்லவன் ஏதுமறியாமல் இருக்கிறானா, அல்லது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறானா என்பதை அறியாத பலவர்மன் "காட்டுப்பகுதியில் பூர்வகுடிகள் நடமாட்டம் அதிகமிருப்பது தெரியாதா உங்களுக்கு?" என்று வினவினான்.

"எனக்கெப்படித் தெரியும்?" சர்வ சாதாரணமாகக் கேட்டான் இளையபல்லவன்.

"நகரப் பாதுகாப்பின் பொறுப்பை ஏற்றுள்ள படைத் தலைவர் நீர். உமக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்?"

"காட்டுப் பகுதியானால் அமீருக்குத்தான் தெரியும். கடற்பகுதியானால் கண்டியத்தேவரைக் கேட்க வேண்டும்." "இரண்டிலும் உமக்குச் சம்பந்தமில்லையா?"

"இல்லை"

"ஏன்?"

"என் உபதலைவர்களை நான் நம்புகிறேன்."

"மேற்பார்வை உமது பொறுப்பல்லவா?"

"என் உபதலைவர்களுக்கு மேற்பார்வை அவசியமில்லை." "அப்படியானால் அடிக்கடி கண்ட உத்தரவுகளை ஏன் பிறப்பிக்கிறீர்கள்?" "அவசியமென்று தோன்றினால் பிறப்பிப்பேன்."

"காவலைக் காட்டுப் பகுதியில் குறைப்பது அவசியம்" "குறைத்தது யார்?" "நீங்கள்தான்." "வேண்டுமானால் மீண்டும் பலப்படுத்தி விடுகிறேன்." என்ற இளையபல்லவன் திடீரெனப் பலவர்மன் போக்கில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சியடைந்தான்.

"வேண்டாம், வேண்டாம் காவலைப் பலப்படுத்த வேண்டாம்."

"உங்கள் கருத்தை அறிந்துதான் காவலைக் குறைத்தேன். அக்ஷய முனைக்கோட்டைத் தலைவரின் இதயமறிந்து நடக்கும் அத்தனை புத்திகூட அவருடைய உபதளபதிக்கு இருக்காதென்று நினைத்தீர்களா?"

என்று கேட்ட இளையபல்லவன் அந்த உபதளபதி தான்தான் என்பதைச் சுட்டிக்காட்டத் தன் மார்பில் கையால் தட்டிக் கொள்ளவும் செய்தான்.

பலவர்மனின் பிரமிப்பு உச்சிக்குப் போய்க் கொண்டிருந்தது. தன் இதயமறிந்து உத்தரவுகளைப் பிறப்பிப்பதாகச் சொன்ன இளையபல்லவன் மதியிழந்து உளறுகிறானா அல்லது தன்னைப்பார்த்து நகைக்கிறானா என்பது விளங்கவில்லை அக்ஷயமுனைக்கோட்டைத் தலைவனுக்கு. அந்தச் சமயத்தில் இளையபல்லவன் புத்தி பெரும் நிதானத்திலிருந்ததைப் புரிந்து கொண்ட பலவர்மன்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
471
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நீரிழிவு நிலை உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவு வகைகள்

நீரிழிவு நிலை உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவு வகைகள் உண்மையிலே அனைவருக்குமே பொருத்தமான ஒரு ஆரோக்கிய உணவுமுறையாக அமைந்திருக்கிறது. இந்த உணவு வகைகளை சுவை நிறைந்ததாக சமையல் செய்து உண்பது மனதுக்கும் உடலுக்கும் புத்தாக்கத்தை கொடுத்து மனிதனின் ஆரோக்கியத்தை வளர்க்க உறுதுணையாக அமையும்.

முட்டை, பால், கோழி இறைச்சி, மீன், இறால், தயிர், மோர் போன்றவை அதிக புரதத்தையும், விற்றமின்கள், கனியுப்புக்களையும் கொண்டவை. இவற்றை உங்களுக்குப் பிடித்த சுவையான வடிவத்தில் தயார் செய்து உண்ணமுடியும்.

சமையலின் பொழுது வாசனைத்திரவியங்கள், போதியளவு உறைப்பு, புளி, மஞ்சள், இஞ்சி, சீரகவகைகள், வெந்தயம், மல்லி போன்றவற்றை வேண்டிய அளவில் சேர்த்துக் கொள்ள முடியும். இவை உடல் நலத்திற்கு நன்மை பயப்பவையாக அமைவதுடன் உணவின் சுவையையும் அதிகரிக்க உதவும்.

மரக்கறி வகைகளை தெரிவு செய்யும் பொழுது வெவ்வேறு வரணங்களில் காணப்படும் பலவகை மரக்கறி வகைகளை மாறி மாறி தெரிவு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் எல்லா வகையான ஊட்டச்சத்துக்களும் எமக்கு கிடைக்கும். பூசணி, கரட், பீற்றூட், முள்ளங்கி உட்பட அனைத்து வகையான மரக்கறி வகைகளையும் பயன படுத்த முடியும்.

நீரிழிவு நிலைஉள்ளவர்கள் பழவகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இது முற்றிலும் தவறானது. அன்னாசி, விளாம் பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்புப்பழம், வாழைப் பழம், வத்தகப்பழம், தோடம் பழம், மாதுளம்பழம், நாவற் பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்தவை. இவற்றை போதிய அளவில் உண்ண முடியும்.



பழங்கள் உண்ணும் பொழுது குருதிக்குளுக்கோசின் அளவு சற்று அதிகரித்தாலும் கூட இவற்றை உண்ணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் பலமடங்கு அதிகமாகும். பழச்சாறுகளில் வெல்லத்தின் செறிவு அதிகமாகும். நார்த்தன்மை குறைவாகவும் இருப்பதுடன் பசியை கட்டுப்படுத்தும் வீதமும் குறைவாக இருக்கிறது. எனவே பழங்களை பழச்சாறாக மாற்றி குடிப்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்ததாகும்.

கொட்டைவகைகளான கச்சான், கடலை, மரமுந்திரிகை (கயூ), பொட்டுக்கடலை போன்றவை உடல் ஆரோக்கியத்தை வளர்க்க உதவும். எனவே இவற்றை இடைநேரத்தில் தேனீருடன் உண்ணமுடியும்.

புரதச் சத்து அதிகமுள்ள பயறு, உழுந்து, சோயா, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை சுவைபட போதிய அளவில் சமைத்து உண்ணமுடியும். மாப்பொருள் செறிவு அதிகமுள்ள அரிசி, கோதுமை, ஆட்டாமா, குரக்கன் போன்றவற்றை பயன்படுத்தி செய்யும் உணவு வகைகளை குறைத்துக்கொள்வது நல்லது. காரணம் இவை சமிபாடு அடையும் பொழுது அதிகளவு குளுக்கோசு உண்டாகின்றது.

ஒப்பீட்டளவில் தீட்டாத அரிசிமா, குறைவாக தீட்டப்பட்ட குத்தரிசி, உழுத்தம்மா, பயற்றம்மா போன்றவற்றில் செய்யப்படும் உணவுவகைகள் வெள்ளைநிற அரிசிவகைகள், வெள்ளை நிற மாவகைகளில் செய்யப்படும் உணவுகளிலும் பார்க்க சிறந்தவையாகும்.

மாப்பொருள் அதிகமுள்ள உணவுவகைகளை உண்ணும் பொழுது உணவுக்கோப்பையில் அரைப்பங்கு இலை வகைகள், மரக்கறி வகைகளால் நிறைந்திருப்பது அவசியமாகும்.

உணவிலே சீனி, சக்கரை, பனங்கட்டி, குளுக்கோசு போன்றவற்றை தவிர்த்து அவற்றிற்குப்பதிலாக தேவை ஏற்படின் இனிப்புச்சுவையுள்ள இனிப்பூட்டிகளை பயன்படுத்துவது நல்லது.

இந்த இனிப்புச்சுவையுடைய இனிப்பூட்டிகள் உடல் நிறையையோ அல்லது குருதிகுளுக்கோசின் அளவையோ அதிகரிக்கமாட்டாது.

எண்ணெய், பட்டர், கொழுப்பு என்பன அதிகமுள்ள பொரித்த உணவுவகைகளுக்குப் பதிலாக "பக்" செய்யப்பட்ட உணவு வகைகளை தெரிவு செய்வது நல்லது.

உப்பை முற்றாக தவிர்த்து விட வேண்டும் என்ற அவசியம் இல்லை. அளவான உப்பு சேர்த்து சுவையாக சமையல் செய்யமுடியும். உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுவகைகளை தவிர்த்து விடுவது நன்மை பயக்கும்.

அதிகளவு பழவகைகளையும், மரக்கறிவகைகளையும் உண்பது எம்மை மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், பாரிச வாதம், நிறை அதிகரிப்பு, கொலஸ்ரோல் அதிகரிப்பு போன்ற நோய் நிலைகளிலிருந்து பாதுகாக்கும்.

வீட்டின் அன்றாட பாவனைக்கு சிறிய உணவுக் கோப்பைகளையும், சிறிய தேநீர் பேணிகளையும் பயன்படுத்துவோம். இது நாம் மேலதிகமாக உண்பதை தவிர்க்க உதவும்.

சோறு, பிட்டு போன்றவற்றை பரிமாறுவதற்கு சிறிய கரண்டிகளையும் மரக்கறி வகைகளை பரிமாறுவதற்கு பெரிய கரண்டிகளையும் பயன்படுத்துவோம். உணவை ஆறுதலாக சுவைத்து ரசித்து உண்ணும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரே வகையான உணவில் அனைத்துவகையான ஊட்டச்சத்துக்களும் அடங்கி இருக்காது. எனவே நாம் உண்ணும் உணவின் வகைகளை மாற்றிக் கொள்வது பயன்தரும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

- ❖ அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு எதிர் வீதியில்.
- ❖ புனித திரேஸா பாடசாலை பின்புறம்.
- ❖ அச்சுவேலி சமுர்த்தி வங்கி அருகாமை.
- ❖ அச்சுவேலி ஆயுள்வேத மருந்தகம் அருகாமை
- ❖ மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் அருகாமை.
- ❖ அச்சுவேலி பஸ் நிலையம் 600m தூரத்தில் உள்ளது.

**காணி விபரம்**



34 பரப்பு 14 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நடுவே 20 அடி பாதை வைத்து பிரிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில துண்டுகளே மீதமுள்ளது.

தொடர்புகளுக்கு

**076 824 75630, 71 731 5572**

(5928)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நெடுங்குளம் வீதி கொழும்புத் துறையில் 3 1/4 பரப்புடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**077 850 0395, 076 650 2727**

(5920)

## கடை தேவை

மல்லாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான பகுதிகளில் கடை வாடகைக்கு தேவைப்படுகிறது. கொடுக்க விரும்புவோர் உடன் அழைக்கவும்.

**075 260 1904**
**076 575 2624**

(1700)

## முதியோர் பராமரிப்பு

பயிற்றப்பட்ட பணியாளர்களால் வீட்டிலேயே வைத்து முதியோர்களை பராமரித்துக் கொடுக்கப்படும். தனி அறைகள் கொடுக்கப்படும்

T.P No:- 077 093 486
Wha.No:- 077 020 4203

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

(5929)

## மணமகன் தேவை

1996, இந்து, விசாகம், DOCTOR
பூர்வீகம் - மானிப்பாய், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 12210.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401

(177)

www.EQMarriageService.com

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**
யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி
ஈச்சமோட்டை றோட், இல.89, யாழ்ப்பாணம்
(முன்பதிவு செய்து வரவும்)

(C-4333)

## வீடு வாடகைக்கு

கைதடி-மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மருதனார் மடம் சந்திக்கும் இடையில்) சகல வசதிகளுடன்கூடிய, நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள மேல்மாடி வீடு (3000 sq.ft) வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(தரகர்கள் தேவையில்லை)

Whatsapp
**+94 77 115 5909**

(5904)

## வீடு விற்பனைக்கு

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)

Whatsapp
**+94 77 220 1592**

(5904)

## காணி விற்பனைக்கு

நீர்வேலிச் சந்தியில் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல சூழலில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**071 016 9768, 076 481 1296**
**076 917 0364, 077 437 0882**

(5913)

## மணமகள் தேவை

1996, இந்து, பூசம், DOCTOR
பூர்வீகம் -யாழ்ப்பாணம், வதியுமிடம் -வவுனியா
மணமகன் பதிவு இல: 12225.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401

(177)

www.EQMarriageService.com

### பிரதி பொலிஸ்மா அதிபர்
# பதவி நீக்கம்

(கொழும்பு)

பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க, ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக லலித் பத்திநாயக்க தொடர்ந்தும் பணியாற்றுவார் என குறிப்பிடப்படுகிறது.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ் மாஅதிபராக பணியாற்றிய சஞ்சீவ தர்மரத்ன, குறித்த பதவியிலிருந்து நீக்கப்பட்டதால், குறித்த வெற்றிடத்திற்கு லலித் பத்திநாயக்கவை நியமிக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வெளிநாட்டு சுற்றுப்பயணத்தில் இருப்பதால், பிரதி பொலிஸ்மா அதிபராக சஞ்சீவ தர்மரத்ன தற்போது பணியாற்றி வருகிறார். (நி)

## வேலைவாய்ப்பு

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடி தேவை.
வயது எல்லை 20-40 இற்கு உட்பட்ட ஆண்கள்.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

- ❖ மேற்பார்வையாளர் (Supervisor)
- ❖ இயந்திர இயக்குநர் (Machine Operator)
- ❖ களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)
- ❖ சாரதி (Drivers)
- ❖ மூடை தூக்கும் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் (Laborers)

தொடர்புகளுக்கு
**RG Brothers, No: 228, Canel Road, Elakanda Hendala Wattala.**
**077 434 6367**

(174)

## BURO STRUCTURES (PVT) LTD VACANCIES

Location: Jaffna | Full-Time

We are hiring Senior and Junior Detail Engineers for steel structure detailing.

Senior Detail Engineer:

5 - 8 years experience in steel detailing/structural design. Strong in Tekla & AutoCAD, connection design, fabrication/erection. Able to lead, coordinate and review drawings.

Junior Detail Engineer:

1-3 years experience (fresh graduates may apply). Skilled in AutoCAD; Tekla an advantage. Good understanding of steel fabrication and detailing.

**Apply: admin@burostructures.lk / karththe@burostructures.lk**

(1703)

## காணி விற்பனைக்கு

இளவாலை, சிறுவிளான், ஞானோதயா வாசியசாலை வீதியில், காப்பற் வீதியில் இருந்த 200m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள, பண்ணை அமைப்பதற்கான கட்டுமானங்களுடன் கூடிய 6.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)

Whatsapp
**+94 77 220 1592**

(5904)

## காணி உடன் விற்பனைக்குண்டு

பலாலி வீதியுடனான கோண்டாவில் டிப்போக்கு அருகில் உள்ள VIP திருமண மண்டபத்திற்கு பக்கத்தில் உள்ள 7 பரப்புக் காணி சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**075 945 3391**

(1705)

## போதைப்பொருளுடன் 40 பேர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு மாதத்தில் ஐஸ் மற்றும் போதைப் பொருட்களுடன் 40 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை ஏற்கனவே இவ்வாறு ஐஸ் மற்றும் போதைப்பொருள் என்பனவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 90 பேருக்கு நீதிமன்றத்தினால் தண்டனையும் வழங்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொலிஸ் சிவில் பாதுகாப்பு குழுக்களை வலுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது. (8-315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரின் மீன்களுக்கான விலையில் திருத்தம்

(கொழும்பு)

ரின் மீன்களுக்கான அதிகபட்ச சில்லறை விலைகளை திருத்தி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி,நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய ரின் மீன்களுக்கான விலைகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

டுனா (425) கிராம் 380 ரூபாவுக்கும், மெகரல் (425 கிராம்) 480 ரூபாவுக்கும், மற்றும் ஜக் மெகரல் (425 கிராம்) 560 ரூபாவுக்கும் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## நாமல்-சுமந்திரன் சந்திப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்றத் தவறியமை தொடர்பான பேரணி குறித்து கலந் துரையாடப்பட்டுள்ளது.

21 ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கேற்காவிட்டாலும் ஒரு முக்கிய எதிர்க் கட்சி என்ற வகையில், பேரணி தொடர்பிலும் பிரச்சினைகள் குறித்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு தெரிவிப்பது அவசியம் என நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மரண அறிவித்தல்

பிறப்பு
1940 • 04 • 27



இறப்பு
2025 • 11 • 14

## அமரர். வல்லி துரைராஜா

(விஸ்ணுசித்தன், கார் சாரதி)

*கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி துரைராஜா அவர்கள் இந்தியாவின் சென்னை, கிருஸ்ணா நகர் என்னும் முகவரியில் 14.11.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.*

*அன்னார் காலம் சென்றவர்களான வல்லி சிவகாமியின் மூன்றாவது புதல்வனும், குமாரு அன்னம் தம்பதிகளின் மூத்த மருமகனும் சத்தியலெனின், கோகுலலெனின், சூரியலெனின், சுகுணா, காந்தலெனின், மயூரலெனின், வனஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன், கோகிலவதி, கனிஸ்ரா, றொபினா, கிருபாதேவி, கிறிஸ்ரினா, கமல்ராஜ், ஆகியோரின் அன்பு மாமானாரும், ஆகாஸ், பிரியங்கா, அபினாஸ் ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் காலம்சென்ற வர்சிகா மற்றும் விஸ்ணுகா, கீர்த்தன், ஜோயெல், ஜெரின், அனேகன், ஆருஷன், அஸ்விந், சுருதிகா அவர்களின் அப்பப்பாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை பிருந்தாவநகர், கரண்ட் பியூரல் தரை வெங்கடேஸ்வர நகர், வலசவாக்கம், சென்னை என்ற முகவரியில் உள்ள இந்து மயானத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் இறுதிக்கிரியையும் தகனக்கிரியையும் இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

077 615 1986 (C-4335) தகவல் குடும்பத்தினர்

## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 200 | 220 | -- |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 180 | 240 | 220 | 170 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 250 | 250 | 240 | 230 |
| தக்காளி | 160 | 200 | 180 | 200 | 150 | 230 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 160 | 200 | 120 | 200 | 110 |
| கோவா | 200 | 180 | 200 | 250 | 180 | 70 |
| கரட் | 200 | 250 | 300 | 250 | 220 | 140 |
| பூசணி | 60 | 80 | 50 | 80 | 50 | 200 |
| புடோல் | 180 | 300 | 120 | 250 | -- | 30 |
| வாழைக்காய் | 100 | 80 | 50 | 150 | 80 | -- |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 200 | 350 | 150-250 | 100 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 150 | 200 | 180 | 230 |
| பாகற்காய் | 800 | 650 | 400 | 1200 | 400 | 145 |
| வெண்டக்காய் | 150 | 200 | 120 | 200 | 100 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 180 | 200 | 300 | -- | 100 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 200 | 200 | 225 |
| லீக்ஸ் | 240 | 250 | 250 | 250 | 160 | 250 |
| பீற்றூட் | 200 | 150 | 120 | 200 | 150 | 150 |
| கறிமிளகாய் | 800 | 450 | 600 | 500 | 600 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 600 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 600 | 350 | 250 |
| கத்தரிதம்புள்ள | 150 | 180 | 120 | 180 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 140 | 60-140 | 80 | 120 | -- | -- |
| தேசிக்காய் | 800 | 1700 | 1000 | 800 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 150-200 | -- | -- |
| இராசவள்ளி | 600 | 650 | 500 | 800 | -- | 150 |
| வெங்காயப்பூ | 400 | -- | -- | -- | -- | 600 |
| முள்ளங்கி | 150 | 200 | 150 | 250 | 150 | -- |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 60 | -- | 70 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | -- | 40 |
| ஈரப்பலா | 100 | 100 | 120 | 200 | -- | 40 |

# இராசிபலன்

16.11.2025
ஐப்பசி 30, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முழுவதும்

அத்தம் பின்னிரவு 4.35 மணிவரை
சுப நேரம் 9.07-10.37 மணிவரை
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை

அமிர்த சித்தம்,
சுபமுகூர்த்த நாள்

வளவன்




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களால் முன்னேற்றம் காணும் நாள்.




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.




புதிய அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




குடும்ப ஒற்றுமை கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செவிகுளிரும் செய்திகள வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.




குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பயணங்களின் போது அவதானம் தேவை.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கும் நன்மை தேடிக்கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரியாதை வயதைப் பொறுத்து வருவதில்லை.
அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்தே வருகிறது.
– அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பொது எதிரணிக்கு எமது தமிழ் எம்பிக்கள் ஆதரவு தரலாகாது

தேசிய மக்கள் சக்தியின் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட ஊழல் ஒழிப்புத் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா பாராட்டியுள் ளார்.

எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய ஒரு பாராளு மன்ற உறுப்பினர் ஜனாதிபதி அநுர முன்னெ டுக்கும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கையைப் பாராட் டியிருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

வழமையில் ஆளுந்தரப்பின் அத்தனை நட வடிக்கைகளையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட் சிகளின் மரபு என்பதாக நிலைமை இருந்தது.

ஆனால் அந்த மரபை உடைத்தெறிந்து, ஆளுந்தரப்பு முன்னெடுக்கின்ற நல்ல விடயங் களை ஆதரிக்க வேண்டும். அதனைப் பாராட்ட வேண்டும். அப்படிச் செய்வதும் எதிர்க்கட்சி களின் கடமை என்ற உண்மையை ஹர்ச டி சில்வா நிரூபித்துள்ளார்.

உண்மை. எதிர்க்கட்சி என்பதற்காக எதிர்க் கும் கட்சி என்ற நினைப்பில் செயற்படுவது அவ்வளவு ஆரோக்கியமான விடயமல்ல.

நல்ல விடயங்களை – நல்ல ஆலோசனை களை யார் முன்வைத்தாலும் அதனை ஆதரிக் கின்ற பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண் டும். அந்த வகையில் ஜனாதிபதி அநுரவின் அரசு முன்னெடுக்கின்ற ஊழல் ஒழிப்பு, போதைப் பொருள் ஒழிப்பு என்பவற்றுக்கு அனைவரும் ஆதரவு வழங்குவது மிகவும் அவசியமாகும்.

ஆம், அரசாங்கம் முன்னெடுத்துவரும் ஊழல் ஒழிப்புக் காரணமாக ஊழல்வாதிகள் பலர் கைது செய்யப்படுகின்றனர். தவிர, ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பொலிஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கூடவே, ஊழல் மோசடிகளுக்கு உறுதுணை யாக இருக்கின்ற பொலிஸ் உயரதிகாரிகளுக்கு தண்டனைக்குரியவாறு இடமாற்றங்களும் வழங்கப்படுகின்றன.

பொலிஸ் சேவையில் உள்ள உயர் அதிகாரி களுக்கு இவ்வாறு தண்டனைக்குரிய இடமாற் றத்தை வழங்குவதென்பது சாதாரணமான விடயமல்ல. இருந்தும் அதனை ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் பக்கச்சார்பின்றிச் செய்து வருகிறது. சுருங்கக்கூறின் அநுர அரசு தவிர்ந்த வேறு எந்த ஆட்சியாளர்களா லும் இது முடியாத காரியம் என்றே கூற வேண்டும்.

இங்குதான் தமிழ் மக்களாகிய நாம் எமது இனப்பிரச்சினைக்கான தீர்வை – எமக்கான உரிமையை வென்றெடுப்பதில் இராஜவியூகம் அமைக்க வேண்டும்.

அவ்வாறு வியூகம் அமைப்பதாயின், ஜனாதி பதி அநுரவின் அரசாங்கம் முன்னெடுக்கும் நல்ல விடயங்களுக்கு எங்களின் ஆதரவை வெளிப்படுத்துவது கட்டாயம். இதைச் செய்யும் போது தென்பகுதி மக்கள் எங்களின் நியாயத் துவத்தைப் புரிந்துகொள்கின்ற சூழ்நிலை உருவாகும்.

ஆம், அரசாங்கத்துக்கு எதிராக உருவாகும் பொது எதிரணியில் எங்கள் தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்கள் எவரும் அங்கம் பெறு வதைத் தவிர்ப்பது கட்டாயமானது.

தேவையாயின் பொது எதிரணியில் சிங் களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறட் டும். நாம் அதில் அங்கம் வகித்து, எங்கள் தொடர் பான சிங்கள மக்களின் நேரிய சிந்தனையை சிதறடிக்காமல் பார்த்துக் கொள்வோம்.

# மதுபானசாலை அனுமதிப்பத்திர மோசடி பகிரங்கப்படுத்தப்படும் என்கிறது அரசு

(கொழும்பு)

கடந்த அரசாங்க காலத்தில் மதுபான சாலைகளுக்கான அனு மதிப்பத்திரம் வழங்கு வதில் ஏற்பட்டுள்ள மோசடிகள் குறித்த தக வல்களும் அதனுடன் தொடர்புடையவர்களின் பட்டியலும் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் என அரசாங்கம் அறி வித்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக் கான பாதீட்டின் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் முஜீபூர் ரஹ் மான் எழுப்பிய கேள்வி க்கு பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ இந்த விடயத்தினைத் தெரிவித் தார்.

அங்கு மேலும் கருத் துரைத்த அவர்,

மதுபானசாலைக் கான அனுமதி வழங்கு போது இரண்டு வழி முறைகள் பின்பற்றப்படு கின்றன.

அதன்படி, முதலில் விலைமனுதாரர்கள் தெரிவு செய்தல் மற்றும் விலை மனுக்கள் கிடை த்த பின்னர் அரசாங்கத் தினால் பின்பற்றப்படும் வழிமுறைகளுக்கமைய அனுமதி வழங்கப்படும்.

விலை மனுக்கள் ஏற் றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் முறையாக நிலையான கட்டணம் செலுத்தப்பட்டுள் ளதா? தூரத்துக்கமைய அந்தப் பகுதியில் மது பானசாலை அமைக்க முடியுமா? என்பது குறித்து ஆராயப்பட்டு மதுபானசாலைக்கான அனுமதி வழங்கப்படும்.

அதன்படி, அரச அதி காரிகளினால் இந்த விட யங்களில் எவ்விதத் தவ றும் ஏற்படவில்லை என்றே நிதி அமைச்சின் செயலாளரினால் நீதி மன்றத்திற்கு அறிவிக் கப்பட்டுள்ளது. எனினும் விலை மனுதாரர்களை தெரிவு செய்யப்படும் போது ஏற்பட்டுள்ள மோசடி குறித்து அர சாங்கம் பட்டியல் ஒன் றைத் தயாரித்துள்ளது.

அதற்கமைய, விலை மனுதாரர்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள மோசடிகள் மற்றும் அத னுடன் தொடர்புடையவர் களின் தகவல்கள் விரை வில் பகிரங்கப்படுத்தப் படும் என்றார். (ம-7)

## செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் சுகாதார நடைமுறைகள் மீறல்

## இருவருக்கு அபராதம்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்லவச்சந்நிதி ஆலயச் சூழலில் சுகாதாரச் சீர் கேட்டுடன் பாணிப்பூரி விற்பனை செய்தவருக் கும் உணவக உரிமை யாளருக்கும் பருத்தித் துறை நீதிமன்றால் தலா 50 ஆயிரம் ரூபாய் தண் டம் விதிக்கப்பட்டுள் ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் மேற்கொள்ளப் பட்ட கண்காணிப்பு நட வடிக்கையின் போது சுகாதார நடைமுறை களைப் பின்பற்றாது பாணிப்பூரி விற்பனை செய்தவருக்கும் சுகா தார விதிமுறைகளைப் பின்பற்றாத உணவக உரிமையாளருக்கும் எதிராக வல்வெட்டித் துறைப் பொதுச் சுகாதார பரிசோதகரினால் பருத் தித்துறை நீதிவான் நீதி மன்றில் வழக்குத் தொட ரப்பட்டது.

குறித்த வழக்கு விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை தம் மீதான குற்றச்சாட் டுக்களை அவர்கள் ஏற் றுக்கொண்டதையடுத்து அவர்களை எச்சரித்த மன்று இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துத் தீர்ப் பளித்தமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

## உழவுஇயந்திரம் விபத்து; சிறுவன் உயிரிழப்பு

(பொலநறுவை)

பொலநறுவை மனம் பிட்டிய, மலியதேவபுர பகுதியில் தனது தாத் தாவுடன் வயலுக்குச் சென்ற 15 வயது சிறுவன் உழவு இயந்திரம் கவிழ் ந்து விபத்துக்குள்ளான தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடை ந்த சிறுவனின் தாத்தா வும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகப் பொலிஸார் தெரி வித்தனர்.

நேற்று முன்தினம் (14) இரவு 7.30 மணியளவில் சிறுவன் தனது தாத்தா வுடன் வயலுக்குச்சென்று வீடு திரும்பிக் கொண் டிருந்த போது அவர்கள் பயணித்த உழவு இயந் திரம் கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

மனம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி பி. ஜி.எஸ்.ஜி. அரி யரத்ன தலைமையி லான அதிகாரிகள் குழு இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (ம-7)

## பாடசாலைக்கு அருகில்

## போதை மாத்திரை விற்ற இளைஞன் அதிரடிக் கைது

பாடசாலைக்கு அரு கில் போதை மாத்திரை களை விற்பனை செய்த இளைஞன் ஒருவர் ஹொரணைப் பொலி ஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபரான இளைஞன் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வர் ஹொரணை பிரதேச த்தில் வசிக்கும் 25 வயது டையவர் என இனங் காணப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 220 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை ஹொரணை பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

## காதலால் நேர்ந்த கொடூரம்

## சிறுமி படுகொலை இளைஞன் தற்கொலை

(கம்பளை)

கம்பளையில் 16 வயதுச் சிறுமியை கூரிய ஆயுதத்தால் தாக்கி படு கொலை செய்த குற்றச் சாட்டில் தேடப்பட்டு வந்த 28 வயதுடைய இளை ஞன் தனது வீட்டில் உயிர்மாய்த்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கம்பளையைச் சேர்ந்த 16 வயதான சிறுமியொருவர் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கப் பட்டு படுகொலை செய் யப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன் னெடுத்த பொலிஸார் காதல் விவகாரத்தால் கொலை இடம்பெற்றுள் ளதாகவும் காதலனே கொலை செய்ததாகவும் கூறி 28 வயதுடைய காத லனைக் கைது செய்வ தற்கு நடவடிக்கை எடுத் திருந்தனர்.

அந் நிலையில் குறித்த காதலன் தனது வீட்டில் விபரீத முடிவெ டுத்து உயிரிழந்த நிலை யில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (ம-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

'காடு நம் தாய், தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சி விடக்கூடாது'



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவும் சூழல் 80 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழலை பேணிய காணி உரிமையாளர்களுக்கு 80 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரிவுகளில் கடந்த வாரம் டெங்கு கட்டுப்பாட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நுளம்பு பெருகக்கூடியவாறான சூழலினை வைத்திருந்த 10 காணி உரிமையாளர்களிற்கு எதிராக நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரான ப.தினேஷ் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்.

மன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட வேளை, அனைத்து காணி உரிமையாளர்களும் தம் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்களை எச்சரித்த மன்று தலா 8 ஆயிரம் ரூபாய் வீதம் 10 பேருக்கும் 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தது. (8-33)

# வல்வெட்டித்துறையில் ஐவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கஞ்சா, ஐஸ் போதைப் பொருட்களுடன் அவற்றினை விற்பனை செய்வதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், கையடக்க தொலைபேசி என்பவற்றுடன் 5 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை பகுதியில், போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் கும்பல் ஒன்று தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் காங்கேசன்துறை பிரதேச குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஐவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து கேரள கஞ்சா ஒரு கிலோ 51 கிராம், ஐஸ் போதைப்பொருள் 20 கிராம் 620 மில்லிகிராம், போதைப்பொருள் வலையமைப்பை பேணியதாக சந்தேகிக்கப்படும் 4 கையடக்க தொலைபேசிகள், போதைப் பொருள் விற்றதன் மூலம் பெறப்பட்ட 15 ஆயிரத்து 720 ரூபா பணம் போதைப் பொருளை விற்பனை செய்வதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்களை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

# ஐந்து உணவகங்களுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் தண்டம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்களில் காலாவதி கடந்த உணவுப் பொருட்களை விற்பனைக்கு வெளிக்காட்டிய இரு வியாபார நிலையங்களிற்கும் உணவகத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீரினை பொது மக்களிற்கு இடையூறு ஏற்படுத்தும் முகமாக வீதியிற்கு அப்புறப்படுத்திய உணவக உரிமையாளரிற்கும் எதிராகப் பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது உரிமையாளர்கள் தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் மொத்தமாக 1 இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட தொண்டைமானாறு பகுதியில் அமைந்துள்ள சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத இரு உணவக உரிமையாளர்களிற்கும் மொத்தமாக 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-60-33)

# போசாக்குணவு வழங்கல்

(அராலி)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு நிதி மூலம் பொருளாதார ரீதியாக வசதி குறைந்த கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போசாக்குணவு வழங்கும் நிகழ்வானது நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆனைக்கோட்டை,மானிப்பாய் உப அலுவலகங்களுக்குட்பட்ட பிரதேச பயனாளிகளுக்கு பிரதேசசபை கலாச்சார மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் தவிசாளர் சபையின் செயலாளர் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (8-104)

# அரச மருத்துவ நிலையத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு

வட்டுக்கோட்டை அரசாங்க ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தின் மருத்துவ நோயாளர் நலச் சேவை புதிய நிர்வாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் போஷகராக வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர், எஸ்.நந்தகுமார், தலைவராக வெற்றிவேல் சக்திவேல், உப தலைவராக ஆ.சிவக்குமார், செயலாளராக வி.வள்ளிகாந்தன், பொருளாளராக சோ.நாதன், உப செயலாளராக ச.அரவிந்தன், நிர்வாக சபை உறுப்பினர்களாக சே.குகனேசன், ப.சிறிதரன், வி.தயாளன், தி.பூபாலசிங்கம், தி.ஜெர்மலா, ற.ரஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8)

# இரு சைவ உணவகங்களுக்கு பூட்டு!

(வவுனியா)'

வவுனியா, ஹொறவப் பொத்தானை வீதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு சைவ உணவகங்கள் சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் தற்காலிகமாக மூடப்பட்டது.

குறித்த இரு உணவகங்களும் சுகாதார பரிசோதகர்களால், சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது அவை சுகாதாரமற்ற முறையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இரு உணவகங்களையும் எதிர்வரும் 14 நாட்களுக்கு மூடுமாறு சுகாதார பரிசோதகர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (8-250)

## தமிழ் ...

கைகளை முன்னெடுங்கள் என தொல்.திருமாவளவனிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் "கார்த்திகை வாசம்" மலர்க்கண்காட்சியை திறந்து வைக்க யாழ்ப்பாணம் வருகை தந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல். திருமாவளவனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 39 வருடங்களாக முடக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட விடயங்களை அமுல்படுத்தாமல் ஒற்றையாட்சியின் கீழான 13ஆம் திருத்தம் என்கிற விடயத்தோடு நிற்கிறது. இதனால் தமிழ் மக்களின் அரசியலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியாத நிலைமைக்கு சிக்குப்பட்டிருக்கிறோம்.

ஆகவே இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனில் இந்திய மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். இலங்கை பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப இந்தியாவின் உதவி தேவை.

தெற்கில் இந்தியாவை எதிர்த்தவர்கள் கூட பொருளாதாரக் காரணிகளுக்காக இந்தியாவுடன் ஒத்துப் போகும் நிலைமைக்கு வந்துள்ளனர். அதனால் இந்திய மத்திய அரசு இலங்கையுடனான பேரம் பேசும் தன்மை வலுப் பெற்றுள்ளது.

இந்த நிலையில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை சந்தித்த ஈழத் தமிழர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். அதனால் தொல். திருமாவளவனைச் சந்தித்து இந்த விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

தமிழகத்தின் ஆட்சியின் பங்காளி அவர். ஈழத் தமிழர்களின் விடயம் தொடர்பிலும், இன்றைக்கு இருக்கக் கூடிய 13ஆம் திருத்தம் தொடர்பிலும் அதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

அதேபோன்று இலங்கையிலுள்ள சட்டங்கள் தொடர்பிலும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

தமிழக அரசு, ஈழத் தமிழர்கள் விடயங்கள் தொடர்பில் ஆணித்தரமான நிலைப்பாட்டை எடுக்க அவரின் ஒத்துழைப்பே மிக அவசியம். அதனை அவர் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என அவரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

விடுதலைப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் இனவழிப்புக்குத் தொடர்ச்சியாக முகம் கொடுத்து வருகிறது. இன்றைக்கு உயிர்கள் பறிக்கப்படாது விடினும் எங்களுடைய இருப்பு இல்லாமல் போகிறது.

பொருளாதார ரீதியாக தமிழ்த் தேசம் பலவீனம் அடைந்துள்ளது. தமிழ் மக்களின் பொருளாதார இருப்பு திட்டமிட்டு வேறு தரப்பினருக்கு மாற்றப்படுகிறது.

தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற வேறுபாடு பேசாது நாம் இலங்கையர் என இந்த அரசாங்கம் கூறிக்கொண்டு தமிழர்களின் இருப்பை அழித்து வருகின்றனர்.

திட்டமிட்டு தமிழர்களை பலவீனப்படுத்தி வருகின்றனர். இதனைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழகம் ஈழத்தமிழர்கள் விடயத்தில் தொடர்ச்சியாக மௌனம் காத்து வருவதும் தமிழ்மக்களுக்குப் பலவீனமாகவுள்ளது.

எனவே தமிழகத்திலுள்ள அனைத்து தரப்பினரும் ஈழத் தமிழர்கள் விடயத்தில் ஆக்கபூர்வமான விடயங்களை முன்னெடுத்து, அனைத்துத் தமிழ் மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வினை இலங்கை அரசாங்கம் வழங்க இந்தியாவை அழுத்தம் கொடுக்க வைக்க வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தொல்.திருமாவளவனிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம் என்றார். (ம-7,33)

## 40 ஆசிரிய ...

ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து 7 மாணவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சில மாணவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கல்லூரி நிர்வாகம் கூறியே தனியார் மருந்தகங்களுக்குச் சென்றதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

சுகவீனமடைந்த சில மாணவர்கள் வீடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-7,250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரதிப் பொலிஸ்...

திற்கு அமைய, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த திலக் தனபால வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகம் மற்றும் வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிகளில் இருந்த ஜி.எம்.எச். புத்திக்க சிறிவர்தன வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ம-7,33)

## மருந்துச்...

வடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மருத்துவ சபை எச்சரித்துள்ளது.

மருந்துச்சிட்டைகளை எழுதுவது மற்றும் பரிந்துரைப்பது தொடர்பான அதிகாரபூர்வ வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு மருத்துவ நிபுணர்களை வலியுறுத்தி இலங்கை மருத்துவ சபையானது ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சில மருத்துவர்களால் வழங்கப்படும் தெளிவற்ற மருந்துச்சிட்டைகள் குறித்து மருந்தாளுநர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை மருத்துவ சபை தெரிவித்துள்ளது.

இத்தகைய தெளிவின்மை காரணமாக சரியான மருந்தைக் கண்டறிவது கடினமாகி, நோயாளியின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வழிகாட்டுதல்களுக்கு இணங்கத் தவறும் மருத்துவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை மருத்துவ சபை மேலும் எச்சரித்துள்ளது. (ம-7)

## ஐஸ் போதை...

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 560 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் 1000 ரூபாய் பணமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு திருட்டுச் சம்பவத்தில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 26 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7,316)

## மன்னார்...

மன்னாரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த காற்றாலை மின் திட்டத்திற்கு எதிரான போராட்டம் 105 ஆவது நாளான நேற்று சனிக்கிழமையுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார் நேற்று சனிக்கிழமை (15) மாலை போராட்டக் களத்தில் விசேட ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார்,

மக்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதாரத்தையும் இருப்பையும் பாதிப்புக்குள்ளாக்கி வரும் காற்றாலை மற்றும் கனிய மண் அகழ்வுக்கு எதிரான போராட்டம் இன்றைய தினம் (நேற்று) 105ஆவது நாளைக் கடக்கின்றது.

ஜனாதிபதி அவர்களின் அமைச்சரவை அறிவிப்பை நாங்கள் சற்று பரிசோதனைக்கு உட்படுத்தினோம். அதற்கமைவாக 105 ஆவது நாளான சனிக்கிழமை (15) எமது போராட்டத்தை நிறுத்திக் கொள்ளுகின்றோம்.

எமது போராட்டம் என்ன கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்டதோ அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

எங்களுடைய முக்கியமான கோரிக்கை என்ன என்றால் மன்னார் மண்ணிலே கனிய மணல் அகழ்வுக்கான அனைத்து வித அனுமதிகளும் நிறுத்தப்பட வேண்டும். மேலும் மன்னார் தீவில் அகழ்வு செய்யப்படுகின்ற மணல் மண் தீவை விட்டு வெளியில் கொண்டு செல்லப்படுவது தவிர்க்க வேண்டும்.

கொண்டு செல்லப்படும் மண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவே அரசாங்கம் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்காது என்ற நம்பிக்கையுடனே இந்தப் போராட்டத்தை நிறுத்துகிறோம்.வெகு விரைவில் அரசாங்கம் கனிய மணல் தொடர்பாக அமைச்சரவை அனுமதியைப் பெற்று தேசிய கொள்கையாக அதனை அறிவிப்பார்கள் என்பதை நம்புகின்றோம் என்றார். (ம-7,285)

## போதைப்பொரு...

கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைத்தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான மூவரும் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## மத்...

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பலாலிவிமான நிலையம் தற்போது நட்டத்தில் இயங்குவதாகவும், எனினும் அதனை நவீனமயமாக்கிவினைத்திறனான சேவையை முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பல மில்லியன் பணத்தை செலவழித்து மற்றுமொரு மத்தல விமான நிலையமாக பலாலியை மாற்ற முடியாது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அதனைப் படிப்படியாகச் செயற்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் பருத்தித்துறையில் உள்ள துறை முகத்தை அமைப்பது தொடர்பில் இந்தியாவுடன் பல்வேறு பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் அண்மையில் தொழில்நுட்பக் குழுவொன்றும் பருத்தித்துறைக்கு வந்து சென்றதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை காங்கேசன்துறை துறைமுகம் என்பது வர்த்தக ரீதியில் இயங்குவதையும் சுட்டிக்காட்டினார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2025.11.15
சீட்டிழுப்பு இலக்கம் 6014
Z 8 8 3 8 0 2

அத சம்பத
Z 3 8 0 2
சீட்டிழுப்பு இலக்கம் 0589
National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.11.15
சீட்டிழுப்பு இலக்கம் 0130
மீனம் 15 17 44 3025

தன நிதானய
திகதி - 2025.11.15
சீட்டிழுப்பு இலக்கம் - 2044
O 02 49 52 69 O

மெகா பவர்
திகதி 15/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2362
Y 11 03 06 26 66

ஜய JAYA
திகதி 2025.11.15
சீட்டிழுப்பு இலக்கம் 0282
K 0 9 8 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4256
சீட்டிழுப்பு திகதி 15.11.2025
P 32 40 43 46
P

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.15
சீட்டிழுப்பு இலக்கம் 1323
தனுசு 11 26 58 61 தனுசு



உத்தியோகபூர்வ முடிவுகள்
15.11.2025 வெற்றி வாரம் 0722
S 6 1 2 3 4 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,698,917.60
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2988
சீட்டிழுப்பு திகதி 2025.11.15 தினம் சனிக்கிழமை
04 21 22 74 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,244,436.80

சனிதா
திகதி 15.11.2025 வெற்றி வாரம் 5149
01 13 71 74 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,775,762.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு

சசிரி
வெற்றி வாரம் 818
சீட்டிழுப்பு திகதி 15.11.2025 சனிக்கிழமை
09 23 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4700
சீட்டிழுப்பு திகதி 15.11.2025 தினம் சனிக்கிழமை
03 09 26 32 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

லக்பதி
சீட்டிழுப்பு வாரம் 2164
15.11.2025 சனிக்கிழமை
S 04 04 20 28 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.607,385,546.80

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2814
சீட்டிழுப்பு திகதி : 2025.11.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,863,140.00
06 46 51 76 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொக்குவில் – தலையாழி
## அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை
# பொதுக்கூட்டம்

எதிர்வரும் 30-11-2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய சிவஞான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**

1. இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் கணக்கு அறிக்கை
5. சபையோர் குறிப்புரை
6. புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு
7. ஆலய முகப்பு கோபுர நிர்மாணப் பணிகள் பற்றிய கலந்துரையாடல்

**முக்கிய குறிப்பு :**

பிரேரணைகள் ஏதும் இருப்பின் 23-11-2025ற்கு முன்னர் ஆலய நிர்வாகத்திடம் எழுத்து மூலம் ஒப்படைக்கவும்.

புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்படவுள்ளமையினால் அனைத்து உபயகாரர்கள் மற்றும் பரிபாலன சபை அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(5927)

இங்ஙனம்
- நிர்வாக சபையினர் -

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 224/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 258/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 150/= | Max 5Kg |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 239/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 199/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 254/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பயறு | - 690/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 975/= | |
| 1Kg கறுப்பு கௌப்பி | - 1290/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(1709)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

# வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு (Computer Billing) செய்யக்கூடியவர்கள் - பழக விரும்புபவர்கள் தேவை.

**தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.**

**ஆண்கள் மட்டும்**

- தகைமை : அடிப்படை கணனி அறிவு அவசியம்
- வயதெல்லை : 20 – 30 வரை

(5887)

**070 401 6775**

# உடனடியாக வேலையாள் தேவை

- **Salesman (18 to 50 வயது)**
- **Sales Girls (18 to 35 வயது)**

யாழ்ப்பாணம் அல்லது பிற மாவட்டங்களிலிருந்து **Salesman & Sales Girls** தேவை.

- அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்கள் அல்லது தொடக்க நிலையாளர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ஜவுளி வியாபாரத்தில் ஆர்வம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- வெளி நகரத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும்.
- தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**Contact: 077 222 9772 / 076 979 0684**
**WhatsApp: 077 222 9772**

(5881)

# காணிகள் தேவை

**“ஜெயம் றியல் எஸ்டேட்” நிறுவனத்திற்கு உடனடியாகக் காணிகள் தேவை.**

- கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, ராச பாதை வீதி, நிலாவரை, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய்,ஊரெழு, மானிப்பாய், தெல்லிப்பளை போன்ற இடங்களில் 2 பரப்புக்கு மேற்பட்ட காணிகளும் அத்துடன் அமைந்த வீடுகளும் விற்பனைக்கு இருந்தால் உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.
- ஆவணங்கள் அனைத்தும் சட்டத்தரணி மூலம் சரிபார்க்கப்பட்ட பின்னர் விலை கொடுத்து வாங்கப்படும்.
- தரகு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ சமூக வலைத்தளங்கள் மூலம் விளம்பரங்கள் செய்யப்பட்ட காணிகளின் உரிமையாளர்களோ தொடர்பு கொள்ள வேண்டாம்.
- “ஜெயம் றியல் எஸ்டேட்” நிறுவனம் காணிகள் வீடுகளை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் நிறுவனம் ஆகும். எனவே காணிகள், வீடுகள் விற்பனைக்கு இருப்பின் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(5917)

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

**சதீஸ் - 077 986 5457**
**ஜெயம் - 077 805 1655**

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு
## குவைத் அன்ட் மலேசியா

**மலேசியா (AL/1004/0004/25)**

| | | |
|---|---|---|
| தொழில் | : | வீட்டு வேலை |
| தேவை | : | 100 பேர் |
| சம்பளம் | : | 1700 RM (123,389/=) |
| SLBFE | : | இலவசம் |

**விபரங்கள்**

- ✔ ஒப்பந்தம்: 2 வருடம்
- ✔ ஒரு நாளுக்கு 12 மணி நேரம்
- ✔ உணவு, இருப்பிடம், மருத்துவம் மற்றும் விமானச்சீட்டு இலவசம்
- ✔ வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு

(1706)

**குவைத் (AL/1004/0003/25)**

| தொழில் வகை | தேவை | சம்பளம் | கட்டணம் |
|---|---|---|---|
| வீட்டு பணியாளர் | 249 | 120 KD | இலவசம் |
| வீட்டு வேலை ஆண் | 20 | 120 KD | 305,604/= |
| வீட்டு ஓட்டுநர் - இலங்கை வாகன ஓட்டுநர் உரிமம் | 20 | 120 KD | 196,715/= |
| வீட்டு ஓட்டுநர் - Gulf License | 20 | 130 KD | 226,413/= |
| வீட்டு ஓட்டுநர் - குவைத் வாகன ஓட்டுநர் உரிமம் | 20 | 140 KD | 305,604/= |
| வீட்டு சமையல் ஆண் | 20 | 120 KD | 305,604/= |

**SAINAS TRAVELS & TOURS**
No.19, Playground Road, Obeysekarapura, Rajagiriya (L.L.No,1004)
TEL - 011 287 8778, 077 758 8781
077 990 7911 (Jaffna Contact)
sainastravels@gmail.com sainastravels.lk

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப... ...191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org